# 2

# தேசிய உற்பத்தியும் செலவினமும்

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் துறைகள் என்பவற்றிலிருந்தான சவால்களுக்கு மத்தியில் பொருளாதாரமானது முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 5.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இன் முதலரைப் பகுதியில், 3.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்திருக்கிறது. உள்நாட்டுப் பக்கத்தில், கொள்கைகளில் ஏற்பட்ட மாற்றங்கள், குறிப்பாக, அரச நிதிகளைத் திரட்சிப்படுத்துவதனை நோக்கமாகக் கொண்ட இறைக் கொள்கை வழிமுறைகளும் மோசமான வானிலை நிலைமைகளும் வளர்ச்சி உத்வேகத்தினை மழுங்கச் செய்த வேளையில் ஏற்றுமதிக்கான கேள்வி எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்கக் குறைவாக இருந்தமை வெளிநாட்டுக் கேள்வியைப் பாதித்தது. கட்டுமான நடவடிக்கைகளில் காணப்பட்ட மீட்சி கைத்தொழில் தொடர்பான நடவடிக்கைகளை உத்வேகப்படுத்தி 2016இன் முதலரைப் பகுதியின் வளர்ச்சிக்குப் பங்களித்தன. 2016இன் முதலரைப் பகுதியின் வளர்ச்சியில் பணிகள் நடவடிக்கைகளிலிருந்தான பங்களிப்பிற்கு முக்கியமாக நிதியியல் பணி நடவடிக்கைகளில் தொடர்ச்சியாக ஏற்பட்ட விரிவாக்கம் உதவியாக இருந்தது. எனினும், இக்காலப்பகுதியில் வேளாண்மை நடவடிக்கைகள் சுருக்கமடைந்தன. பொருளாதார நடவடிக்கைகளை முன்கூட்டியே தெரிவிக்கும் குறிகாட்டிகள், மத்திய வஙகியினால் நடத்தப்பட்ட அளவீட்டில் பிரதிபலிக்கப்பட்டவாறு வியாபார மனோபாவத்தின் மேம்பட்ட போக்கு என்பன 2016இன் பின்னரைப் பகுதியில் ஒட்டுமொத்த பொருளாதார நடவடிக்கைகளும் மீண்டும் வேகமடையுமென்பதனை சுட்டிக்காட்டின. பொருளாதார நடவடிக்கைகளில் அரச துறையின் ஈடுபாடு இறைத் திரட்சிக்கான கடப்பாடுகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் மிதமானதாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்ற வேளையில் பொருளாதாரத்தினை முன்கொண்டு செல்வதற்கு தனியார் துறை ஊக்குவிக்கப்படுதல் வேண்டும். கைத்தொழில் மற்றும் பணி நடவடிக்கைகள் பின்னரைப் பகுதியில் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு வழிவகுக்கும் என எதிர்பார்க்கப்படுகின்ற வேளையில் வேளாண்மை நடவடிக்கைகள் தொடர்ந்தும் மிதமாகச் செயலாற்றும். எனினும், சந்தைப் பங்கேற்பாளர்களினால் வலியுறுத்தப்பட்டவாறு இறை மற்றும் நாணயத் திரட்சி வழிமுறைகள் தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களின் பற்றாக்குறையுடன் சேர்த்து, அண்மைக்கால பொருளாதார வளர்ச்சி வாய்ப்புக்களின் மீது அழுத்தத்தினை ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது. வெளிநாட்டுத் துறையில் உலகளாவிய வளர்ச்சி குறைவாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இதன் விளைவாக வெளிநாட்டுக் கேள்வியிலிருந்து தோன்றுகின்ற வளர்ச்சித் தூண்டல் குறைந்துவிடும்.

## 2016இற்கான அபிவிருத்திகள்

### உற்பத்தி

- **2016இன் முதலரைப்பகுதியில் மொ.உ. உற்பத்தி 2015இன் தொடர்பான காலப் பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 5.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 3.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.** வேளாண்மை நடவடிக்கைகளில் சுருக்கம் பதிவு செய்யப்பட்டமைக்கிடையிலும் கைத்தொழில் மற்றும் பணிகளுடன் தொடர்பான நடவடிக்கைகளில் ஏற்பட்ட விரிவாக்கம் இவ்வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக அமைந்தது. இதன்படி, 2016இன் முதலரைப்பகுதியில் கைத்தொழிலுடன் தொடர்பான பொருளாதார நடவடிக்கைகள் 5.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தமைக்கு கட்டடவாக்க நடவடிக்கைகளில் ஏற்பட்ட கணிசமான மீட்சியும் தயாரிப்பு நடவடிக்கைகளிலிருந்து கிடைத்த சாதகமான பங்களிப்புமே முக்கிய காரணங்களாக அமைந்தன. ஆண்டின் முதலரைப் பகுதியில் பணிகளுடன் தொடர்பான நடவடிக்கைகள் 4.9 சதவீதத்தினால் வளர்ச்சி கண்டன. இவ்வளர்ச்சிக்கு நிதியியல் பணிகள் நடவடிக்கை, மொத்த விறபனை மற்றும் சில்லறை வர்த்தக நடவடிக்கைகள் மற்றும் தனியாள் பணிகள் என்பனவற்றில் ஏற்பட்ட விரிவாக்கமே பெருமளவிற்குக் காரணமாகும். அதேவேளை, 2016இன் முதலரைப் பகுதியில் வேளாண்மை நடவடிக்கைகள் 2.5 சதவீதத்தினால் சுருக்கமடைந்தன. வேளாண்மை நடவடிக்கைகளின் சுருக்கத்திற்கு தேயிலை, நெல், இறப்பர் மற்றும் வாசனைத்திரவியங்கள் என்பனவற்றின் பயிர்ச்செய்கைகளிலும் மீன்பிடி மற்றும் காடாக்கல் நடவடிக்கைகளிலும் ஏற்பட்ட வீழ்ச்சியே காரணமாயிற்று. அதேநேரம் பொருளாதார உற்பத்தி மீதான உதவுதொகைகளைக் கழித்த வரி ஆண்டின் முதலரைப் பகுதியில் 3.1 சதவீதத்தினால் சுருக்கமடைந்து இக்காலப்பகுதியில் ஒட்டுமொத்தப் பொருளாதார வளர்ச்சியை மழுங்கச் செய்தன.

**வரைபடம் 2.1** காலாண்டு மொ.உ.உ. வளர்ச்சி வீதங்கள்(அ)




(அ) தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் மீள்திருத்தப்பட்ட அடிப்படை ஆண்டிற்கான (2010) மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது

- **2016இல் பொருளாதார வளர்ச்சி 2015இன் 4.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் ஏறத்தாழ 5.5 சதவீதத்தினால் வளர்ச்சியடையுமென எறிவு செய்யப்பட்டுள்ளது.** முன்னணி பொருளாதார குறிகாட்டிகளினாலும் மத்திய வங்கியினால் நடத்தப்பட்ட வியாபார மனோபாவ அளவீடுகளினாலும் பிரதிபலிக்கப்பட்டவாறு எதிர்பார்க்கப்பட்ட வளர்ச்சி கைத்தொழில் மற்றும் பணிகள் நடவடிக்கையினால் தூண்டப்படுவதுடன் வேளாண்மை நடவடிக்கைகள் சிறிதளவு பங்களிப்பினையே வழங்கும். கட்டடவாக்க நடவடிக்கைகளில் ஏற்பட்ட மீட்சியின் பக்கபலத்துடன் தயாரிப்பு நடவடிக்கைகளிலான சாதகமான பங்களிப்புடன் சேர்ந்து கைத்தொழில் நடவடிக்கைகள் பொருளாதார வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்களவிற்குப் பங்களிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. நிதியியல், காப்புறுதி மற்றும் உண்மைச் சொத்து, அரச பணிகள் மற்றும் தனியாள் பணிகள் மற்றும் மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தக நடவடிக்கைகள் என்பனவற்றினை உள்ளடக்கிய முக்கிய பணி நடவடிக்கைகள் பணிகள் துறையின் வளர்ச்சிக்குச் சாதகமான முறையில் பங்களிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தேயிலை, அரிசி மற்றும் இறப்பர் செய்கையின் பேரில் குறைந்தளவு செயலாற்றம் எதிர்பார்க்கப்பட்டமையின் முக்கிய காரணமாக இவ்வாண்டுப் பகுதியில் வேளாண்மை நடவடிக்கைகள் மிதமாக விளங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

## பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்பட்ட வளர்ச்சி

### வேளாண்மை, காடாக்கல் மற்றும் மீன்பிடி

- **2016இன் முதலரைப்பகுதியில் வேளாண்மை, காடாக்கல் மற்றும் மீன்பிடி நடவடிக்கைகள் 2015இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 8.1 சதவீதம் கொண்ட வளர்ச்சிக்கெதிராக 2.5 சதவீதத்தினால் சுருக்கமடைந்தன.** குறிப்பாக, ஆண்டின்

பின்னரைப் பகுதியில் நிலவிய மோசமான வானிலை நிலைமைகள் வேளாண்மை நடவடிக்கைகளின் வளர்ச்சியைப் பாதித்தன. நெல், தேயிலை, இறப்பர், வாசனைத்திரவியங்கள் என்பனவற்றின் பயிர்ச்செய்கையிலும் மீன்பிடி நடவடிக்கைகளிலும் காடாக்கல் மற்றும் மரக்குற்றிகளைத் தறித்தல் நடவடிக்கைகளிலும் பதிவுசெய்யப்பட்ட சுருக்கம் வேளாண்மை நடவடிக்கைகளின் வளர்ச்சியை மழுங்கச் செய்தன. மேலும், பழவர்க்கங்கள் ஏனைய குடிபான பயிர்களின் பயிர்ச்செய்கை, பயிர் இனப்பெருக்கம் மற்றும் வேளாண்மைக்கான ஆதரவு நடவடிக்கைகள் என்பனவும் இக்காலப்பகுதியில் சுருக்கமடைந்தன. எனினும் எண்ணெய் பசையுள்ள பழமரங்கள், காய்கறிகள், தானியங்கள் (நெல் நீங்கலாக), கரும்பு என்பனவற்றின் பயிர்ச்செய்கையும் விலங்கு உற்பத்தியும் வேளாண்மை நடவடிக்கைகளின் வளர்ச்சிக்குச் சாதகமான முறையில் பங்களித்தன.

## உற்பத்திப் போக்குகளும் நிறுவன ரீதியான ஆதரவும்: வேளாண்மை

### வேளாண்மை உற்பத்திச் சுட்டெண்

- **2016இன் முதலரைப் பகுதியில் வேளாண்மை மற்றும் மீன்பிடித் துறையின் உற்பத்தியினை அளவிடுகின்ற வேளாண்மை உற்பத்திச் சுட்டெண் முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 5.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 3.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.** இக்காலப்பகுதியில்

அட்டவணை 2.1
**வேளாண்மை உற்பத்திச் சுட்டெண் (2007-2010=100)**

| விடயம் | 2015 (அ) முதலரை | 2016 (ஆ) முதலரை | மாற்ற வீதம் (%) |
|---|---|---|---|
| **வேளாண்மை மற்றும் மீன்பிடி** | **138.3** | **133.9** | **-3.2** |
| **1 வேளாண்மை** | **135.0** | **131.9** | **-2.3** |
| 1.1 வேளாண்மை பயிர்கள் | 132.0 | 129.1 | -2.2 |
| நெல் | 153.9 | 155.2 | 0.8 |
| தேயிலை | 110.8 | 97.9 | -11.6 |
| இறப்பர் | 75.1 | 71.4 | -4.9 |
| தெங்கு | 105.9 | 107.8 | 1.8 |
| ஏனைய பயிர்கள் | 155.8 | 154.6 | -0.8 |
| மரக்கறி | 164.6 | 150.4 | -8.6 |
| பழவகைகள் | 152.8 | 155.7 | 1.9 |
| ஏனைய பயிர்கள் | 173.9 | 167.8 | -3.5 |
| 1.2 விலங்கு வளர்ப்பு | 158.5 | 153.2 | -3.3 |
| **2 மீன்பிடி** | 153.5 | 143.4 | -6.6 |

(அ) திருத்தப்பட்டது.
(ஆ) தற்காலிகமானது
மூலம்: இலங்கை மத்திய வங்கி

நெல் மற்றும் தெங்கு தவிர்ந்த அனைத்துத் துணைச் சுட்டெண்களும் சுருக்கமடைந்தன. நெல்லின் துணைச் சுட்டெண் சாதகமான வானிலை நிலைமைகள் அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பு அதிகரித்தமையுடன் சேர்ந்தமையின் காரணமாக 0.8 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் தெங்கின் துணைச் சுட்டெண் 1.8 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேவேளை, தேயிலை துணைத் துறை 11.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் இறப்பர் துணைத் துறை 4.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. மற்றைய பயிர்கள் துணைத் துறையும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்தமைக்கு காய்கறிகள் மற்றும் ஏனைய களப்பயிர்களில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக இருந்த வேளையில் பழவர்க்கத்தின் துணைத் துறை அதிகரித்தது. விலங்கு வளர்ப்பு துணைத் துறையும் 3.3 சதவீதம் கொண்ட சுருக்கத்தினைப் பதிவுசெய்து இதன் அனைத்துத் துணைத் துறைகளினதும் மோசமான செயலாற்றத்தினைப் பிரதிபலித்த வேளையில் நன்னீர் மீன்பிடி உற்பத்தியில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியின் காரணமாக மீன்பிடி நடவடிக்கைகள் சுருக்கமடைந்தன.

### நெல்

- **2015இல் பதிவுசெய்யப்பட்ட அபரிமிதமான அறுவடையினைத் தொடர்ந்து 2016இல் நெல் உற்பத்தி 4.5 மில்லியன் மெ.தொன்னுக்கு 6.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.** 2015/16 பெரும் போகத்தில் நெல் உற்பத்தி முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியைவிட 2.9 மில்லியன் மெ.தொன்னுக்கு 0.9 சதவீதத்தினால் சிறிதளவால் அதிகரித்து வருடாந்த நெல் உற்பத்தியில் ஏறத்தாழ 64.5 சதவீதத்திற்கு வகைகூறியது. அதிகரித்த பெரும்போக உற்பத்திக்கு 2015இன் பிற்பகுதியில் காணப்பட்ட சாதகமான மழைவீழ்ச்சியும் முக்கிய நெல் உற்பத்திப் பிரதேசங்களில் அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பு அதிகரித்தமையும் காரணங்களாகக் காணப்பட்டன. 2015/16 பெரும்போகத்தில் அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பு 742,724 எக்டேயர்களுக்கு 12.7 சதவீதத்தினால் அதிகரித்தது. எனினும் இப்பருவ காலத்தில் எக்டேயருக்கான நெல் விளைச்சல் கடந்த ஆண்டின் தொடர்பான பருவ காலத்தின் 4,364 கி.கிறாமிலிருந்து 4,349 கி.கிறாமிற்கு 0.3

சதவீதத்தினால் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தமைக்கு குறிப்பிட்ட நெல் உற்பத்திப் பிரதேசங்களில் காணப்பட்ட வெளிறல் மற்றும் இலை உருட்டி நோய்களின் தாக்கம் ஓரளவு காரணமாக அமைந்தது. அதேவேளை, 2016 காலப்பகுதியில் சிறுபோகத்தின் நெல் உற்பத்தி 2015 சிறுபோகத்தினைவிட 1.6 மில்லியன் மெ.தொன்னுக்கு ஏறத்தாழ 18 சதவீதத்தினால் வீழ்ச்சியடையக்கூடும் என எதிர்பார்க்கப்படுவதற்கு, முக்கிய உற்பத்திப் பிரதேசங்களில் சிறுபோக நெல் உற்பத்தியினை தாமதமடையச் செய்த 2016ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் பரந்தளவிலான வெள்ளத்திற்கும் நிலச்சரிவுகளுக்கும் காரணமான கடுமையான வெப்பவலயப் புயலே பெருமளவிற்குக் காரணமாகும். பெரும்போகம், சிறுபோகம் ஆகிய இரண்டிற்குமான மதிப்பிடப்பட்ட வருடாந்த நெல் உற்பத்தி 2.9 மில்லியன் மெ.தொன் அரிசிக்குச் சமமானதாகக் காணப்பட்டதுடன் இது ஏறத்தாழ 14 மாதங்களுக்கான உள்நாட்டு அரிசித் தேவையினையும் பூர்த்திசெய்யப் போதுமானதாக இருந்தது. அதேவேளை, நெல் சந்தைப்படுத்தும் சபை 2014/15 பெரும்போகத்தின் 160,000 மெ.தொன்னுடன் ஒப்பிடுகையில் 2015/16 பெரும்போக அறுவடையிலிருந்து, 131,000 மெ.தொன்னைக் கொள்வனவு செய்ததுடன் இது, 2016 சிறுபோகத்திலிருந்து ஏறத்தாழ 120,000 மெ.தொன்னைக் கொள்வனவு செய்யுமென எதிர்பார்க்கப்பட்டது. எனினும், தனியார் துறையிலிருந்தான உயர் கேள்வியின் காரணமாக சிறுபோகத்தின் இறுதியில் நெற் சந்தைப்படுத்தும் சபை ஏறத்தாழ 25,000 மெ.தொன்னைக் கொள்வனவு செய்யக்கூடியதாக இருந்தது. நெற் சந்தைப்படுத்தும் சபை அதன் களஞ்சியப்படுத்தல்

வரைபடம் 2.2 நெல் உற்பத்தி




இயலளவை நவீனமயப்படுத்தி விரிவாக்குவதன் மூலம் மேலும் வலுப்படுத்தப்படல் வேண்டும். இது, வேளாண்மையாளர்களுக்கு இலாபம்தரும் விலைகளை உறுதிப்படுத்துகின்ற வேளையில் நெல் சந்தைப்படுத்தும் சபையினால் ஏற்படுத்தப்படுகின்ற இழப்புக்களைக் குறைக்கும் பொருட்டு அளவினை நிர்ணயித்தல், உள்ளமைப்பு, அமைவிடம் மற்றும் தானிய இருப்புக்களிற்கு நிதியிடல் என்பனவற்றிற்கு உதவக்கூடிய மிகக் கவனமாக வடிவமைக்கப்பட்ட இருப்பு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தினை தேவைப்படுத்துகிறது. அதேவேளை, 2015ஆம் ஆண்டிலும் 2016இன் தொடக்கத்திலும் அரிசி இறக்குமதி மீது விதிக்கப்பட்ட வரிகளின் மேல் நோக்கிய திருத்தம் அதிகரித்த அரிசி நிரம்பலுடன் சேர்ந்து குறைந்தளவு அரிசி இறக்குமதிக்கு வழிவகுத்தது. இதன்படி, 2016இன் முதலரைப் பகுதியில் இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் அளவு முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியிலிருந்து 15,231 மெ.தொன்னுக்கு 94.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

- **ஆண்டின் முதலரைப் பகுதியில் அதிகரித்த நெல் நிரம்பல் மற்றும் நெல்லின் கொள்வனவு உத்தரவாத விலை குறைக்கப்பட்டமை என்பனவற்றின் உதவியுடன் திறந்த சந்தையில் நெல்லின் விலை தொடர்ந்தும் குறைவாகக் காணப்பட்டது.** 2016இற்கான வரவு செலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்டவாறு உள்நாட்டுச் சந்தையில் அரிசியின் விலைகளை உறுதிப்படுத்தும் பொருட்டு கீரி சம்பா மற்றும் சம்பா வகைகளுக்கான நெல்லின் உத்தரவாதப்படுத்தப்பட்ட கொள்வனவு விலை கி.கிறாமொன்றிற்கு முறையே ரூ.50 இற்கும் ரூ.41 இற்கும் குறைக்கப்பட்ட வேளையில் நாடு மற்றும் ஏனைய வகைகளுக்கான விலைகள் கி.கிறாமொன்றிற்கு ரூ.38 இற்குக் குறைக்கப்பட்டன. ஆண்டின் முதலரைப் பகுதியில் நாட்டரிசியின் சராசரி சில்லறை விலை 4.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த போதும் 2015இன் பிற்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட நெல்லின் அதிகரித்த விலையின் விளைவாக சம்பாவின் விலை ஆண்டின் முதலரைப் பகுதியில் 3.1 சதவீதத்தினால் அதிகரித்தது.

### தேயிலை

- **உள்நாட்டு மற்றும் உலகளாவிய காரணங்கள் இரண்டினாலும் தேயிலைத் துறை தொடர்ந்தும் பின்னடைவுகளைக் கொண்டிருந்தது.** 2016இன் முதலரைப்

பகுதியில் பதிவுசெய்யப்பட்ட தேயிலை உற்பத்தி 2009 இற்குப் பின்னர் இடம்பெற்ற மிகக் குறைந்ததொரு உற்பத்தியாகும். 2016இன் முதலரைப் பகுதியில் தேயிலை உற்பத்தி 153.8 மில்லியன் கி.கிராமிற்கு 11.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்குப் பாதகமான வானிலை நிலைமைகளும் வீழ்ச்சியடைந்துவரும் எண்ணெய் விலைகளின் காரணமாக இலங்கையின் முக்கிய ஏற்றுமதி நாடுகளின் பொருளாதாரம் பின்னடைந்தமையினைத் தொடர்ந்து அந்நாடுகளின் கேள்வி குறைவடைந்தமையும் காரணங்களாக விளங்கின. மொத்தத் தேயிலை உற்பத்தியில் ஏறத்தாழ 61 சதவீதத்திற்கு வகைகூறும் தாழ்நிலத் தேயிலை உற்பத்தி 2016இன் முதலரைப் பகுதியில் 93.5 மில்லியன் கி.கிராமிற்கு 8.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில், உயர்நில மற்றும் மத்தியநிலத் தேயிலை உற்பத்திகள் முறையே 14.2 சதவீதத்தினாலும் 14.7 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. சிறுஉடமையாளர் தேயிலைத் துறை ஒட்டுமொத்த தேயிலைக் கைத்தொழிலில் தொடர்ந்தும் ஆதிக்கம் கொண்டிருந்த போதும் ஆண்டின் முதலரைப் பகுதியில் மொத்தத் தேயிலை உற்பத்திக்கான இதன் பங்களிப்பு 2015 இற்காக பதிவுசெய்யப்பட்ட 73 சதவீதத்திலிருந்து 60 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. முன்னைய உதவுதொகைத் திட்டத்திற்குப் பதிலாக தேசிய வளமாக்கி உதவுதொகைத் திட்டம் ஒரு எக்டேயருக்கும் குறைவான நிலத்தினைக் கொண்டுள்ள தேயிலை சிறுஉடமையாளர்களுக்கு எக்டேயரொன்றிற்கு ரூ.15,000 காசு உதவுதொகையினை வழங்குவதற்காக நடைமுறைப்படுத்தப்பட்டது. தேயிலைத் துறையில் தற்பொழுது நிலவுகின்ற குறைபாடுகளை, தேயிலையின் தரத்தினை மேம்படுத்துகின்ற அதேவேளையில் பெருந்தோட்டக் களத்தினை மேம்படுத்தல் மற்றும் தேயிலைத் தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்தல் என்பனவற்றின் மூலம் வெற்றி கொள்ளுதல் வேண்டும். மேலும், வழங்கல் சங்கிலிகளினூடாக சிறந்த வேளாண்மை நடைமுறைகளையும் சிறந்த தயாரிப்பு நடைமுறைகளையும் பொருத்தமான விதத்தில் நடைமுறைக்கிடுவது, உலகளாவிய சந்தையில் இலங்கைக்கான தேயிலையின் தரத்தினைப் பேண மிக முக்கியமானதாகும்.

வரைபடம் 2.3 தேயிலை உற்பத்தி




- **2014 இலிருந்து தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்த தேயிலை விலைகள் 2016இன் இரண்டாம் காலாண்டுப் பகுதியில் படிப்படியான முன்னேற்றத்தினைக் காட்டியமைக்கு உலகக் கேள்வியில் காணப்பட்ட மேம்பாடே பக்கபலமாகக் காணப்பட்டது.** 2016இன் முதற்காலாண்டுப் பகுதியில் கொழும்பு தேயிலை ஏலங்களில் பதிவுசெய்யப்பட்ட சராசரி தேயிலை விலைகள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த போதும் ஆண்டின் இரண்டாம் காலாண்டுப் பகுதியில் தேயிலை விலைகள் அதிகரிக்கத் தொடங்கி 9.0 சதவீத அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. இதன்படி, 2016இன் முதலரைப் பகுதியில் சராசரி தேயிலை விலைகள் கி.கிராமிற்கு ரூ.425.38 ஆக விளங்கி முன்னைய ஆண்டின் தொடர்பான காலத்தின் விலையைவிட 3.6 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. கொழும்பு தேயிலை ஏலங்களில் சராசரி தேயிலை விலைகளில் ஏற்பட்ட உயர்ந்த அதிகரிப்பு, ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் உயர்நிலத் தேயிலையிலும் (8.1 சதவீதம்) அதனைத் தொடர்ந்து மத்திய நிலத் தேயிலையிலும் (4.6 சதவீதம்) அடுத்து தாழ்நிலத் தேயிலையிலும் (1.2 சதவீதம்) பதிவுசெய்யப்பட்டன. அதேவேளை, 2016இன் முதலரைப் பகுதியில் தேயிலையின் ஏற்றுமதி விலைகளும் 2015இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட கி.கிராமொன்றிற்கான ரூ.599.03 இலிருந்து கி.கிராமொன்றிற்கு ரூ.609.88 இற்கு 1.7 சதவீதத்தினால் அதிகரித்தன. மேலும், 2016இன் முதலரைப் பகுதியில் பச்சைக் கொழுந்து தேயிலைக்காக சிறுஉடமையாளர் பெற்ற சராசரி விலை 2015இன் தொடர்பான காலப்பகுதியின் கி.கிராமொன்றிற்கான ரூ.59.91 இலிருந்து கி.கிராமொன்றிற்கு ரூ.62.20 இற்கு

அதிகரித்தது. கடந்த சில ஆண்டுகளாகக் காணப்படும் கொழுந்து பறிக்கும் விலைகள் அதிகரித்த உற்பத்திச் செலவுகளுடன் சேர்ந்து தேயிலைக் கைத்தொழில் வலுவான முறையில் வேரூன்றச் செய்வதற்கு உடனடியாக கொள்கை வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டிய அவசியத்தினை எடுத்துக்காட்டுகின்றது.

### இறப்பர்

- **உள்நாட்டு மற்றும் உலகளாவிய சந்தைகள் இரண்டிலும் காணப்பட்ட தாழ்ந்த இறப்பர் விலைகள் உள்நாட்டு இறப்பர் கைத்தொழிலுக்குத் தொடர்ந்தும் சவால்களைத் தோற்றுவித்து வருகின்றன.** 2016இன் முதலரைப் பகுதியில் தேயிலை உற்பத்தி 47,894 மெ.தொன்னாக விளங்கி தொடர்ந்து ஐந்தாவதாண்டாக 5.0 சதவீத வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. இதற்குத் தாழ்ந்த விலைகளின் முக்கிய காரணமாக குறிப்பாக சிறுஉடமையாளர் துறையில் பாலெடுக்கும் நாட்களின் எண்ணிக்கை குறைவடைந்தமையே பெருமளவு காரணமாகும். இதன் விளைவாக, இறப்பர் பயிரிடுவோர் எண்ணெய் தாவரம் உட்பட ஏனைய பயிர்களைப் பயிரிடுவதில் நாட்டம் கொண்டனர். 2016இன் முதலரைப் பகுதியில் கிறேப் இறப்பரின் உற்பத்தி முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 7,760 மெ.தொன்னுக்கு 27.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் தட்டை இறப்பர் உற்பத்தி 23,947 மெ.தொன்னுக்கு 5.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, நாட்டின் மொத்த இறப்பர் உற்பத்தியில் ஏறத்தாழ 34 சதவீதத்திற்கு வகைகூறும் குறித்துரைக்கப்படாத வகையின் உற்பத்தி முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 18,981 மெ.தொன்னுடன் ஒப்பிடுகையில் 16,187 மெ.தொன்னுக்குக் குறைவடைந்து 14.7 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. உலகளாவிய சந்தையில் தாழ்ந்த பண்ட விலைகள் பதிவுசெய்யப்பட்ட போதும் உலகின் முக்கிய உற்பத்தி நாடுகளின் இயற்கை இறப்பர் உற்பத்தி 2016இல் 1.3 சதவீதமாக அதிகரிப்பினைப் பதிவுசெய்ததாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. உலகளாவிய இறப்பரின் சந்தையின் வழங்கல் பக்கத்தில் தாய்லாந்தில் காணப்பட்ட கடுமையான மழைவீழ்ச்சி குறைவு, பாலெடுக்கும் பருவத்தினை ஆரம்பிப்பதனை தாமதப்படுத்தியமையானது உலகளாவிய இறப்பர் நிரம்பலர் கிடைப்பனவினைப் பலயீனப்படுத்தியது. அதேவேளை, பன்னாட்டு வானிலை நிலையத்தின்படி லா-நினோ நிகழ்வுகள் 2016இன் இறுதியில் எதிர்பார்க்கப்படுவதனால் இது தென்கிழக்கு ஆசியாவின் வேளாண்மை உற்பத்திகளின் மீது நவெம்பர்/ திசெம்பர் மாதங்களில் மோசமான தாக்கத்தினைக் கொண்டு வரக்கூடும். லா-நினோ மலேசியா, தாய்லாந்து மற்றும் இந்தோனேசியாவில் கடுமையான நீர் பற்றாக்குறையினைத் தோற்றுவித்து இயற்கை இறப்பர் உட்பட அநேக பண்டங்களின் உற்பத்தியைக் கட்டுப்படுத்திவிடும்.

- **உலகளாவிய சந்தையில் இறப்பரின் விலைகள் தொடர்ந்து ஆறாவது ஆண்டாக வீழ்ச்சியடைந்துள்ளது.** உலகளாவிய சந்தையில் இயற்கை இறப்பர் விலைகளில் காணப்படும் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கிற்கு உலகளாவிய கேள்வி குறைவடைந்தமையும் சீனா, யப்பான் உட்பட முக்கிய நுகர்வு நாடுகளின் ஒன்றுசேர்ந்த இருப்புக்களுமே முக்கிய காரணமாகும். உள்நாட்டுச் சந்தையிலும் இறப்பர் விலைகள் உலகளாவிய சந்தை விலைகளுக்கு நிகராகவே நகர்கின்றன. 2016இன் முதலரைப் பகுதியில், கொழும்பு இறப்பர் ஏலங்களில் ஆர்எஸ்எஸ்1 இன் சராசரி விலை கி.கிறாமொன்றிற்கு ரூ.229.59 ஆக விளங்கி 2015இல் பதிவுசெய்யப்பட்ட முதலரைப் பகுதிக்கான சராசரியினைவிட 8.9 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைக் காட்டியது. எனினும், லேட்டெக்ஸ் இறப்பரின் விலை இக்காலப்பகுதியில் கி.கிறாமொன்றிற்கு ரூ.280.56 இனைப் பதிவுசெய்து 1.4 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைக் காட்டியது. இயற்கை இறப்பரின் உலக இருப்பு அண்மைக் காலத்தில் படிப்படியாகக் குறைந்து வருவதனால், எதிர்காலத்தில் முக்கிய நுகர்வு நாடுகளிலிருந்தான இறப்பருக்கான கேள்வி உயர்வடைந்து அதன் மூலம் 2016இன் பிற்பகுதியிலும் 2017இன் முற்பகுதியிலும் இறப்பர் விலைகளை உயர்வடையச் செய்யும். பன்னாட்டு இறப்பர் ஆய்வுக்குழுவின்படி, உலகின் மொத்த இறப்பர் நுகர்வு 2016இல் 3.6 சதவீதம் கொண்ட வளர்ச்சியையும் 2017இல் 3.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியையும் பதிவுசெய்யுமென மதிப்பிடப்பட்டது. உலகளாவிய இணைப்புக்களுடன் இறப்பர் துறை மூலவளங்களை அடிப்படையாகக் கொண்ட தொழில்நுட்ப ரீதியாக மிக நவீனத்துவம் வாய்ந்த கைத்தொழிலாகக் காணப்பட்ட போதும், உள்நாட்டு இறப்பர் கைத்தொழில்

உலகளாவிய சந்தைகளைக் கைப்பற்றிக் கொள்ளும் முழுமையான உள்ளார்ந்த ஆற்றலை இன்னமும் பெறவேண்டியிருக்கிறது. எனவே, இதன் வளர்ச்சி, போட்டித்தன்மை மற்றும் நிலைத்திருக்கும் தன்மையை உறுதிப்படுத்துவதற்குப் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். உள்நாட்டு இறப்பர் துறையின் உற்பத்தியாக்கம் தற்பொழுது குறைவாக இருப்பதனால் இத்துறையின் உற்பத்தித்திறனை உயர்த்துவதற்குப் பொருத்தமான செயற்பாடு சார்ந்த வழிமுறைகள் எடுக்கப்பட வேண்டிய அதேவேளையில் சிறந்த வேளாண்மை நடைமுறைகளும் உற்பத்தித்திறனை அடிப்படையாகக் கொண்ட உதவுதொகைகளும் நடைமுறைக்கிடப்பட வேண்டும். மேலும், இறப்பர் துறையில் தற்பொழுது பாலெடுப்போர் பற்றாக்குறையாகக் காணப்படுவதனால் தற்போதைய பலயீனமான தன்மைகளை வெற்றி கொள்வதற்கு முன்னேற்றங்கண்ட தொழில்நுட்பங்களினை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். இத்துறையானது படிப்படியாக பெறுமதிகூட்டலை நோக்கி மாறிய போதும் உச்சமட்ட நன்மைகளைப் பெறும் விதத்தில் ஊட்டமளிக்கப்பட்டு முகாமைப்படுத்தப்படல் அவசியமாகும். ஆகவே, ஏற்கனவேயுள்ள இறப்பர் பண்ணைகளிலிருந்து உயர்ந்தபட்ச உற்பத்தித் திறனைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டிய வேளையில் பெறுமதிகூட்டலுக்காக உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட இயற்கை இறப்பரின் கிடைப்பனவினை உறுதிப்படுத்துவதன் மூலம் கைத்தொழிலின் ஒப்பீட்டு ரீதியில் வலுவான போட்டித்தன்மை கொண்ட அநுகூலங்களைப் பெறும் விதத்தில் அளவினையும் விரிவாக்கிக் கொள்ளுதல் வேண்டும். சந்தையினை விரிவடையச் செய்வதனையும் தனியார் துறையிலிருந்து புதிய முதலீடுகளைக் கவர்ந்து கொள்வதனையும் இயலச்செய்யும் விதத்தில் கொள்கை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் ஆதரவுடன் சேர்த்துத் தேவையான மென் மற்றும் வன் உட்கட்டமைப்புக்களை வழங்குவது தவிர்க்க முடியாததாக இருக்கிறது.

### தெங்கு

- **2016இன் முதலரைப்பகுதியில் தெங்கு உற்பத்தி முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 5.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1.8 சதவீதம் கொண்ட சிறிதளவு வளர்ச்சியைக் காட்டியது.** வானிலையுடன் தொடர்பான தடைகள், 2016இன் முதற்காலாண்டுப் பகுதியில் நிலவிய பெருமளவு வரண்ட நிலைமைகள் 2016இன் பிற்பகுதியிலும் 2017இன் தொடக்கப் பகுதியிலும் தெங்கு உற்பத்தியை மோசமாகப் பாதிக்கக்கூடும். 2016இன் முதலரைப் பகுதியில் தெங்கு துறையின் துணை வகைகள் கலப்பான செயலாற்றத்தினைப் பதிவுசெய்தன. 2016இன் முதலரைப் பகுதியில் தேங்காய்த் துருவல் உற்பத்தி 16,108 மெ.தொன்னிலிருந்து 24,361 மெ.தொன்னுக்கு 51.2 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் தேங்காய் எண்ணெய் உற்பத்தி 24,953 மெ. தொன்னாக விளங்கி, ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 16.7 சதவீதம் கொண்ட வளர்ச்சிக்கெதிராக 8.2 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. நாட்டின் சமையல் எண்ணெய் தேவைப்பாட்டில் ஏறத்தாழ அரைப்பங்கினை வழங்கும் தேங்காய் எண்ணெய் கைத்தொழில் உயர்ந்த உற்பத்திச் செலவு, குறைந்த இலாப அளவு மற்றும் தாவர எண்ணெய் கைத்தொழிலிருந்தான போட்டி என்பனவற்றின் வடிவிலமைந்த சவால்களை எதிர்நோக்கியிருக்கிறது. தேங்காய் எண்ணெய்க்கான நெருங்கிய பதிலீடாக விளங்கும் தாவர எண்ணெய் கைத்தொழில், இறக்குமதி வரிகளுக்குப் பின்னரும் பெருமளவு இலாபங்களை அனுபவிக்கக்கூடியதாக இருக்கின்றது. எனினும், 2016இன் முதலரைப் பகுதியில் தாவர எண்ணெயின் இறக்குமதி முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 73,959 மெ.தொன்னுக்கு, ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 7.8 சதவீதம் கொண்ட வீழ்ச்சியை எடுத்துக்காட்டியது. இதற்கு, 2015இன் பிற்பகுதியிலும் 2016இன் ஆரம்பத்திலும் தாவர எண்ணெய் இறக்குமதிகளின் மீது விதிக்கப்பட்ட சிறப்புப் பண்டத் தீர்வையும் அதேபோன்று போதுமானளவு உள்நாட்டு இருப்பு கிடைக்கத்தக்கதாக இருந்தமையும் காரணங்களாக விளங்கின. இறக்குமதி செய்யப்பட்ட சமையல் எண்ணெய் நுகர்வோருக்கு நலத் தீங்குகளை உண்டாக்காத விதத்தில் தரநியமங்களைப் பூர்த்தி செய்திருக்கின்றதா என்பதனைக் கண்காணிப்பது முக்கியமானதொன்றாகும். அதேவேளை, முற்றிய தேங்காய் உள்ளீட்டிலிருந்து பெறப்பட்ட உடன் தேங்காய்ப் பாலிலிருந்து பிரித்தெடுக்கப்படுகின்ற வேர்ஜின் தெங்கு உற்பத்தி 2016இன் முதலரைப் பகுதியில் மெதுவான போக்கினைக்காட்டி 6.9

சதவீதமான வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. எனினும், தெங்கு களி உற்பத்தி, பால்மா, மற்றும் திரவ தேங்காய்ப் பால் என்பனவற்றின் உற்பத்தி 2016இன் முதலரைப் பகுதியில் 21,477 மெ.தொன்களுக்கு 53.3 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்தமைக்கு உலகளாவிய சந்தையில் கேள்வி அதிகரித்தமையே காரணமாகும். அதேவேளை, 2016இன் முதலரைப் பகுதியில் செவ்விளநீரின் ஏற்றுமதி கடந்த ஆண்டின் தொடர்பான காலப்பகுதியைவிட 2,600 மெ. தொன்னுக்கு 42.9 சதவீதத்தினால் அதிகரித்தது.

- **தெங்குத் துறையின் முக்கிய துணை வகைகளின் சாதகமான வளர்ச்சி தெங்கினை அடிப்படையாகக் கொண்ட முக்கிய பண்டங்களில் குறைந்த விலைகளைத் தோற்றுவித்தன.** 2016இன் முதலரைப் பகுதியில் உடன் காய்களின் சராசரி விலைகள் காயொன்றிற்கு ரூ.46.50 இற்கு 12.1 சதவீத வீழ்ச்சியைப் பதிவுசெய்த வேளையில் தேங்காய் எண்ணெயின் சராசரி சில்லறை விலை (750 மி.லீ. போத்தல்) ரூ.207.70 ஆக விளங்கி 1.7 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. தேங்காயின் பண்ணை விலைகளின் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கிற்கு தேங்காயின் அதிகரித்த உற்பத்தியும் தேங்காய் எண்ணெய் உற்பத்திக்கு குறைந்தளவு காய்கள் பயன்படுத்தப்பட்டமையுமே முக்கிய காரணங்களாகும். அதேவேளை, 2016இன் முதலரைப் பகுதியில் கொழும்பு தெங்கு ஏலங்களில் தேங்காய்த் துருவலின் சராசரி விலைகள், ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில், கி.கிறாமொன்றிற்கு ரூ.255.35 இற்கு 22.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. தேங்காய் துருவலின் விலைகள் பன்னாட்டுச் சந்தை விலைகளுக்கு இசைவாக நகர்ந்தவிடத்து 2016இன் முதலரைப் பகுதியில் தேங்காய்த் துருவலின் சராசரி ஏற்றுமதி விலைகள் 2015இன் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட கி.கிறாமொன்றிற்கான ஐ.அ.டொலர் 2.76 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ஐ.அ.டொலர் 1.67 இற்கு வீழ்ச்சியடைந்தது.

### ஏனைய களப் பயிர்கள்

- **2015/16 பெரும்போகத்தில் நிலவிய பாரிய மழைவீழ்ச்சி மற்றும் வெள்ளம் என்பன முக்கியமாக பயிர்செய்யப்பட்ட வேளாண்மை நிலங்கள், நாற்றுமேடைகள், மரக்கன்றுகள் என்பனவற்றை மோசமாகப் பாதித்ததுடன் மற்றைய களப் பயிர்களின் குறைந்த உற்பத்திக்கும் காரணமாயிற்று.** இதன்படி, 2015/16 பெரும்போக காலத்தில் ஏனைய களப்பயிர்களின் உற்பத்தி 259,509 மெ.தொன்னாக விளங்கி ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 7.4 சதவீதமான வீழ்ச்சியைக் காட்டிய வேளையில் பயிரிடப்பட்ட நிலப்பரப்பு 101,594 எக்டேயர்களுக்கு 4.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, ஏனைய களப் பயிர்களின் இறக்குமதிகள் மீது விதிக்கப்பட்ட உயர்ந்த சிறப்புப் பண்டத் தீர்வையின் காரணமாக தோன்றிய இலாபம் தரும் விலைகள் உற்பத்தியினை அதிகரிப்பதற்கு உள்நாட்டு வேளாண்மையாளர்களைத் தூண்டின. உருளைக்கிழங்கு மற்றும் பெரிய வெங்காயத்தின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை 2016 மாச்சில் அதிகரித்த வேளை பெரிய வெங்காயத்தின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை 2016 ஓகத்தில் கி.கிறாமொன்றிற்கு ரூ.15 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.40 இற்கு மேலும் அதிகரிக்கப்பட்டது. தட்டைப் பயறு, குரக்கன், சோளம், பயறு, சோயா அவரை, எள்ளு, நிலக்கடலை, பெரிய வெங்காயம், இஞ்சி மற்றும் மிளகாய் போன்ற உள்நாட்டு களப் பயிர்களின் உற்பத்தி 2016இன் முதலரைப் பகுதியில் அதிகரிப்புக்களைப் பதிவுசெய்த வேளையில் உழுந்து, சின்ன வெங்காயம், வத்தாளைக் கிழங்கு மற்றும் உருளைக்கிழங்கு என்பனவற்றின் உற்பத்தி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்தன. உள்நாட்டுக் கேள்வியை விஞ்சிக் காணப்படும் சோளம், நிலக்கடலை, தட்டைப் பயறு போன்ற ஏனைய களப்பயிர்களின் தற்போதைய உள்நாட்டு வழங்கல் நிலைமைகள் சந்தையில் விலங்குத்தீனை உற்பத்தி செய்யும் கைத்தொழில்களுக்கு உதவுமென மதிப்பிடப்பட்டிருக்கிறது. அதேவேளை, 2016இன் இரண்டாம் காலாண்டுப் பகுதியில் வானிலை நிலைமைகளுடன் தொடர்பான இடையூறுகள் 2016 சிறுபோகத்தில் ஏனைய களப் பயிர்களின் பயிர்ச்செய்கையை ஒரு மாத காலப்பகுதிக்கும் மேல் தாமதப்படுத்தின. வெள்ளத்தினைத் தொடர்ந்து காணப்பட்ட வரட்சியின் இணைந்த விளைவு பயிர் செய்யப்பட்ட நிலப்பரப்பு குறைவடைந்தமையுடன் சேர்ந்து 2016இல் தெரிந்தெடுக்கப்பட்ட பயிர்களின் ஒட்டுமொத்த உற்பத்தியின் மீது பாதகமான தாக்கத்தினைக் கொண்டிருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

## காய்கறிகள்

- **மழை, வரட்சி மற்றும் வெள்ளம் என்பனவற்றை உள்ளடக்கிய பல்லினத்தன்மை கொண்ட வானிலைச்சுற்று வட்டத்தின் இணைந்த விளைவு 2016இன் முதலரைப் பகுதியில் காய்கறிகள் துறையில் கலப்பான செயலாற்றத்தினை உருவாக்கியிருக்கின்றது.** 2015/16 பெரும்போக காலத்தில் காய்கறிகள் உற்பத்தி ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 986,232 மெ.தொன்னுக்கு 7.4 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்த வேளையில் முக்கிய காய்கறி உற்பத்தி செய்யப்படும் பிரதேசங்களில் பயிர் செய்யப்பட்ட நிலப்பரப்பு 76,332 எக்டேயருக்கு 6.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. மேலும், 2015/16 பெரும்போகத்தின் ஆரம்ப காலப்பகுதியில் வானிலையுடன் தொடர்பான இடையூறுகள் காய்கறிகளின் பயிர்ச்செய்கையில் தாமதங்களை ஏற்படுத்தியதுடன் அதன் மூலம் சந்தை வழங்கல்களை குறைவடையச் செய்து காய்கறிகளின் விலைகளை உயர்த்தியது. மேலும், பெப்புருவரி மற்றும் மாச்சு மாதங்கள் முழுவதிலும் நிலவிய வரண்ட வானிலை நிலைமைகள் வேளாண் நடவடிக்கைக்குக் கிடைக்கத்தக்கதாக இருந்த நீரைக் குறைத்தமையின் விளைவாக 2016 சிறுபோகத்தில் வேளாண்மை நடவடிக்கைகள் மெதுவடைந்தன. அதேவேளை, மாச்சு மற்றும் ஏப்பிறல் மாதங்களில் இடம்பெறும் பருவகாலங்களுக்கிடையிலான காய்கறிகளின் பயிர்ச்செய்கை சிறுபோகம் ஆரம்பமாக முன் காணப்பட்ட வரண்ட வானிலை நிலைமைகளின் விளைவாக மந்த நிலைமையில் காணப்பட்டது. இடைநிலைப் பருவகாலத்தில் பயிர்ச்செய்கையின் கீழான நிலப்பரப்பு குறைவடைந்தமையின் காரணமாக குறைந்த காய்கறிகளின் நிரம்பலானது மலைநாடு மற்றும் தாழ்நில காய்கறி வகை இரண்டிலும் விலை அதிகரிப்புக்களைத் தோற்றுவித்தது. அதேவேளை வரண்ட வானிலை நிலைமைகள் தெரிந்தெடுக்கப்பட்ட காய்கறி வகைகளின் பழுக்க வைக்கின்ற செயன்முறையினைத் தூண்டியதன் மூலம் அறுவடைக் கால இடைவெளி குறைவடைந்ததுடன் தரம் குறைந்த நிரம்பல் சந்தையினை வந்தடைந்தமையின் விளைவாக விலைகள் குறைவடைந்தன. அதேவேளை, 2016 மேயிலிருந்து யூன் நடுப்பகுதி வரையான காலப்பகுதியில் உயர்தர காய்கறிகளின் சந்தை நிரம்பல் வீழ்ச்சியடைந்து காய்கறிகளின் விலை அதிகரிப்பிற்கு வழிவகுத்தன.

## சீனி

- **2015இன் முதலரைப்பகுதியில் 9.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த சீனி உற்பத்தி, 2016இன் முதலரைப் பகுதியில் 23,472 மெ.தொன்னுக்கு 112.2 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்தது.** தொழிற்சாலை அடிப்படையிலான செயலாற்றத்தினைப் பரிசீலனையில் கொள்கையில், ஒட்டுமொத்தச் சீனி உற்பத்தியில் மிகப் பெரும் பங்கிற்கு வகைகூறும் பெல்வத்தை தொழிற்சாலை 2016இன் முதலரைப் பகுதியில் 11,236 மெ.தொன் உற்பத்தியைப் பதிவுசெய்தது. செவனகல மற்றும் கல்லோயா தொழிற்சாலைகளின் உற்பத்தி 6,954 மெ.தொன்னாகவும் 5,642 மெ.தொன்னாகவும் விளங்கி இக்காலப்பகுதியில் முறையே 45.6 சதவீதம் மற்றும் 55.3 சதவீத கணிசமான அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தன. உயர் விளைச்சலைத் தரும் கரும்பு வகைகளைப் பயிர்செய்தலுக்குப் பொருத்தமான நீர்ப்பாசன முறைமைகள் கிடைத்தமை மற்றும் களப் பேணல் மற்றும் வெளிப்பயிர்ச்செய்கையாளர்களின் பயிரிடல் நடவடிக்கைகளில் ஏற்பட்ட விரிவாக்கம் என்பன அதிகரித்த சீனி உற்பத்திக்குப் பங்களித்தன. 2016இல் மொத்தச் சீனி உற்பத்தி 73,000 மெ.தொன்னுக்கு 30 சதவீதத்தினால் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இது நாட்டின் தேவையில் ஏறத்தாழ 11 சதவீதத்தினை பூர்த்திசெய்யப் போதுமானதாகும். ஆகவே, ஆண்டுதோறும் சீனி இறக்குமதி மீது செலவிடும் பெரும்தொகைப் பணத்தினைப் பரிசீலனையில் கொண்டு கரும்புக் கைத்தொழிலை மீளெழுச்சிப்படுத்துவதற்கு உயர்ந்த முன்னுரிமையினை அரசாங்கம் வழங்க வேண்டும்.

## மீன்பிடி

- **2016இன் முதலரைப்பகுதியில் மீன் உற்பத்தி 239,260 மெ.தொன்னிற்கு 6.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.** கடல் மற்றும் நன்னீர் மீன் உற்பத்தி இரண்டும் முறையே 4.7 சதவீதமான வீழ்ச்சியையும் 21.3 சதவீதமான வீழ்ச்சியையும் பதிவுசெய்தன. கடல் மீன்பிடித் துறையில், ஆழ்கடல் மீன் உற்பத்தி 7.3 சதவீதமான வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. அதேவேளையில் கடல் மீன்பிடித் துறையில் மீன் உற்பத்தியில் ஏறத்தாழ 62 சதவீதத்திற்கு வகைகூறும் கரையோர மற்றும் கடல் நீரேரி மீன்பிடித் துணைத் துறையின் உற்பத்தி 3.1

சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. நன்னீர் மீன்பிடித் துறையில், நன்னீர் மீன்பிடி 18,560 மெ.தொன்னுக்கு 28.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. நன்னீர் மீன்பிடி துணைத் துறையின் உற்பத்தியில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சிக்கு பிரதான நீர்த்தேக்கங்களில் அதிகரித்த நீர்மட்டம் மீன்பிடிக்கக்கூடிய பிரதேசத்தினைக் குறைப்பதற்கு வழிவகுத்தமையே காரணமாகும். எனினும், கூனி இறால் பண்ணை வளர்ப்பு மற்றும் அலங்கார மீன்வளர்ப்பு என்பன முறையே 77.8 சதவீதத்தினாலும் 69.2 சதவீதத்தினாலும் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தன. 2016 யூன் 21ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் இலங்கை கடல் உணவு ஏற்றுமதி மீது விதிக்கப்பட்டிருந்த தடையினை ஐரோப்பிய ஒன்றியம் நீக்கியதன் காரணமாக இலங்கை மீன் வகைகளுக்கு ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பெருமளவு கேள்வி காணப்படுகிறது. ஆண்டு முழுவதும் வற்றாத நீர்நிலைகளில் நன்னீர் மீன்பிடியின் முகாமைத்துவத்தினை மேம்படுத்தும் பொருட்டு தேசிய நீரியல் வாழ் அபிவிருத்தி அதிகாரசபையினால் 2016இன் முதலரைப் பகுதியில் 151 திடீர் பரிசோனைகள் மேற்கொள்ளப்பட்டன. அதேவேளை, வியட்னாமிலிருந்தான தொழில்நுட்ப உதவியுடன் கிளிநொச்சி மாவட்டத்தில் கடல் களைகளை வளர்க்கும் பண்ணைக்கான முன்னோடிச் செயற்றிட்டமொன்று நடைமுறைக்கிடப்பட்டு 2016இன் முதலரைப் பகுதியில் ஏறத்தாழ 89 மெ.தொன் அறுவடை செய்யப்பட்டதுடன் இதில் ஏறத்தாழ 1,000 மக்கள் ஈடுபட்டிருந்தனர். பாரிய மீன்பிடிக் கலம்கள் போதாமல் இருப்பது தொடர்பான பிரச்சனையினை அங்கீகரிக்கின்ற விதத்தில், 55 அடி நீளமான படகுகளைத் தயாரிப்பதற்காக 50 சதவீத கொடையினை வழங்க அரசாங்கம் தீர்மானித்தது. இது பன்னாட்டுச் சந்தையில் உயர் விலைகளைப் பெறக்கூடிய மிகச் சிறந்ததர மீனைப் பிடிப்பதற்கு மீனவர்களை இயலச்செய்யும். எனினும், புதிய தொழில்நுட்பங்கள், ஆராய்ச்சி, முகாமைத்துவம் மற்றும் மூலவளங்களின் பாதுகாப்பு என்பனவற்றின் பற்றாக்குறை என்பன உடனடியாகக் கட்டுப்படுத்தப்பட வேண்டிய சில பிரச்சனைகளாகும்.

### விலங்கு வளர்ப்பு

- **2016இன் முதலரைப் பகுதியில் விலங்கு வளர்ப்புத் துறை கலப்பான செயலாற்றமொன்றினைக் காட்டியது.** 2016இன் முதலரைப் பகுதியில் பால் உற்பத்தி ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 196 மில்லியன் லீற்றர்களுக்கு 8.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு 2014இல் நிலவிய கால் மற்றும் வாய் நோய்ப் பரவலின் காலங்கடந்த தாக்கமே பெருமளவிற்குக் காரணமாகும். மொத்தப் பால் உற்பத்தியில் ஏறத்தாழ 83 சதவீதத்திற்கு வகைகூறும் பசுப்பால் உற்பத்தி 163 மில்லியன் லீற்றராக விளங்கி ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 6.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் எருமைப் பால் உற்பத்தி 32 மில்லியன் லீற்றருக்கு 16.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 2016இல் பால் உற்பத்தி 3 சதவீதத்தினால் 415 மில்லியன் லீற்றருக்கு அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இது,மொத்த உள்நாட்டுக் கேள்வியில் ஏறத்தாழ 55 சதவீதத்தினைப் பூர்த்திசெய்யப் போதுமானதாக இருக்கும். அதேவேளை, 2016இன் முதலரைப் பகுதியில் முட்டை உற்பத்தி 1,128 மில்லியனுக்கு 3.7 சதவீத வீழ்ச்சியைப் பதிவுசெய்த வேளையில் கோழி இறைச்சி உற்பத்தி 81,140 மெ.தொன்னுக்கு 0.2 சதவீதம் கொண்ட சிறிதளவு வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. 2014ஆம் ஆண்டுப் பகுதியில் முட்டையிடும் பேரன்ற் கோழிகளின் குறைந்த இறக்குமதிகள் 2015இல் ஒரு நாள் கோழிக் குஞ்சுகளின் எண்ணிக்கையைக் குறைவடையச் செய்து 2016இல் முட்டை உற்பத்திகள் குறைவடைய வழிவகுத்தது. அதேவேளை, 2016இன் முதலரைப் பகுதியில் முட்டையிடும் பேரன்ற் மற்றும் இறைச்சிக்கான பேரன்ற் என்பனவற்றின் இறக்குமதிகள் முறையே 195.6 சதவீதத்தினாலும் 181.3 சதவீதத்தினாலும் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தன. முட்டை மற்றும் கோழி இறைச்சியின் உற்பத்திச் செலவு அதிகரித்தமைக்கு கோழித்தீன் உற்பத்தியின் விலைகள் அதிகரித்தமை முக்கிய காரணமாக விளங்கியதுடன் இத்தொழிலுக்கான சவாலையும் ஏற்படுத்துகிறது. எனினும், கோழி இறைச்சியின் உயர்ந்தபட்சச் சில்லறை விலையில் ஏற்பட்ட அதிகரிப்பும் முட்டையின் சந்தை விலைகளில் ஏற்பட்ட தளம்பல்களும் உற்பத்திச் செலவில் ஏற்பட்ட அதிகரிப்புக்களை ஈடுசெய்யும். அதேவேளை, மாட்டிறைச்சி, பன்றியிறைச்சி, ஆட்டு இறைச்சி என்பனவற்றின் உற்பத்திகள் 2016இன் முதலரைப் பகுதியில் முறையே 6.0 சதவீதத்தினாலும் 7.6 சதவீதத்தினாலும் 1.5 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன.

## கைத்தொழில்

- **2016இன் முதலரைப்பகுதியில் கைத்தொழில்களுடன் தொடர்பான பொருளாதார நடவடிக்கைகள் 2015இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 2.5 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 5.2 சதவீதம் கொண்ட கணிசமான வளர்ச்சியைப் பதிவுசெய்தது.** கட்டடவாக்க நடவடிக்கைகளில் ஏற்பட்ட கணிசமான மீட்சியும் தயாரிப்பு நடவடிக்கைகளிலிருந்து கிடைத்த சாதகமான பங்களிப்பும் கைத்தொழில் வளர்ச்சிக்கு வழிவகுத்தன. மேலும், மின்வலு, வாயு, நீராவி மற்றும் குளிரூட்டி வழங்கல் நடவடிக்கைகள், வடிகால், கழிவு, சுத்திகரிப்பு மற்றும் அகற்றல் நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்களவிற்கு வளர்ச்சியடைந்தன. அதேவேளை, 2016இன் முதலரைப் பகுதியில் சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் நடவடிக்கைகள் இக்காலப்பகுதியில் மீட்சியடைந்த வேளையில் நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் வழங்கல் நடவடிக்கைகள் சிறிதளவு வளர்ச்சி கண்டன.

- **கட்டடவாக்க நடவடிக்கைகளில் காணப்பட்ட குறிப்பிடத்தக்களவு மீட்சி கைத்தொழில் நடவடிக்கைளின் வளர்ச்சிக்கு தூண்டுதலை வழங்கின.** பரிசீலனைக்குரிய இக்காலப்பகுதியில் கட்டடவாக்க நடவடிக்கைகள் 2015இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 2.8 சதவீதம் கொண்ட சுருக்கத்திற்கு எதிராக 8.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. கட்டடவாக்க நடவடிக்கைகளில் ஏற்பட்ட வளர்ச்சி சிமெந்தின் கிடைப்பனவு 22.9 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமையின் மூலமும் 2016இன் முதலரைப் பகுதியில் கட்டடவாக்க நடவடிக்கைகளுக்கான வர்த்தக வங்கிகளின் தனியார் துறைக் கொடுகடன் 2015இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 40.2 சதவீதத்தினால் அதிகரித்தமையின் மூலமும் பிரதிபலிக்கப்பட்டது. மேலும், இக்காலப்பகுதியில் கட்டட மூலப்பொருட்களின் இறக்குமதிகள் 33.5 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியைப் பதிவுசெய்தது. அதேவேளை, 2016இன் முதலரைப் பகுதியில் சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் நடவடிக்கைகள் 2015இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 3.9 சதவீதம் கொண்ட சுருக்கத்திலிருந்து மீட்சியடைந்து 1.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. ஆண்டின் இரண்டாம் காலாண்டுப் பகுதியில் இரத்தினக்கல் உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பும் 2016இன் முதலரைப் பகுதியில் கட்டடவாக்க நடவடிக்கைகளில் ஏற்பட்ட மீளெழுச்சியும் சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் நடவடிக்கைகள் மீட்சியடைய உதவின. அதேவேளை, ஆண்டின் முதலரைப் பகுதியில் கைத்தொழில் நடவடிக்கைகளுள் மிகப் பெரிய பிரிவான தயாரிப்பு நடவடிக்கைகள் இரண்டாம் காலாண்டுப் பகுதியில் மோசமான வானிலையுடன் தொடர்பான இடையூறுகள் மற்றும் அரச வரிகளில் ஏற்பட்ட மாற்றங்களினால் உற்பத்திச் செலவில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக சுருக்கமடைந்ததனால் 2015இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 5.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 3.9 சதவீதத்திற்கு மெதுவடைந்தன. மேலும், முக்கிய ஏற்றுமதி நாடுகளிலிருந்தான குறைந்த கேள்வியும் தயாரிப்பு நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த வளர்ச்சியைப் பாதித்தன. ஆண்டின் முதலரைப் பகுதியில் பதிவுசெய்யப்பட்ட வளர்ச்சிக்கு தளபாடங்களின் தயாரிப்பு, கோக் மற்றும் பெற்றோலிய சுத்திகரிப்பு உற்பத்திகள் என்பன 2015இன் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 5.8 சதவீதம் மற்றும் 5.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் முறையே 17.1 சதவீதத்தினாலும் 37.0 சதவீதத்தினாலும் குறிப்பிடத்தக்களவிற்கு விரிவடைந்தமையே முக்கிய காரணமாகும். அதேநேரம், ஆண்டின் முதலரைப் பகுதியில் மின்வலு, வாயு, நீராவி மற்றும் குளிரூட்டி வழங்கல் நடவடிக்கைகள் மற்றும் வடிகால், கழிவு, சுத்திகரிப்பு மற்றும் வழங்கல் நடவடிக்கைகள் 2015இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட முறையே 6.8 சதவீதம் மற்றும் 22.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் முறையே 8.5 சதவீதத்தினாலும் 21.0 சதவீதத்தினாலும் மேலும் விரிவடைந்தன. எனினும், நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் வழங்கல் நடவடிக்கைகள் 2015இன் இதே காலப்பகுதியில் காணப்பட்ட 3.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இக்காலப்பகுதியில் 1.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன.

### உற்பத்திப் போக்கும் நிறுவன ரீதியான உதவியும்: தயாரிப்பு நடவடிக்கைகள்

- **2016இன் முதலரைப் பகுதியில் தயாரிப்பு நடவடிக்கைகள் கைத்தொழில் நடவடிக்கை களுக்கு மிகப் பெரும் பங்களிப்பினை வழங்கி மொத்த கைத்தொழில் நடவடிக்கைகளில் ஏறத்தாழ 60 சதவீதத்திற்கு வகைகூறின.** பன்னாட்டு நியம கைத்தொழில் வகைப்படுத்தல் திருத்தம் 4இனைப் பயன்படுத்தி 17 முக்கிய தயாரிப்பு நடவடிக்கைகளை உள்ளடக்கிக் கணிக்கப்பட்ட தொழிற்சாலைக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் பொருளாதாரத்தின் தயாரிப்புத் துறைச் செயலாற்றத்தின் போக்கு களின் குறியீடொன்றினை வழங்குகின்றது[1].

### தொழிற்சாலைக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்

- **இவ்வாண்டின் முதலரைப் பகுதியில் தொழிற்சாலை கைத்தொழில் உற்பத்தி சுட்டெண் 2015இன் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில 2.1 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தது.** நலிவடைந்த உலகளாவிய கேள்விக்கு குறைவடைந்த பண்ட விலைகள், பாதிக்கப்பட்ட பொருளாதாரங்களின் கொள்வனவு வலுவில் தோற்றுவிக்கப்பட்ட வீழ்ச்சி அதேபோன்று இக்காலப்பகுதியில் நிலவிய ஏனைய வெளிநாட்டுத் தளம்பல்கள் முக்கிய காரணங்களாக விளங்கின. மேலும், மோசமான வானிலை நிலைமைகள் மற்றும் ஏனைய இடையூறுகளின் காரணமாக குறிப்பாக ஆண்டின் இரண்டாம் காலாண்டுப் பகுதியில் ஏற்பட்ட நிரம்பல்பக்க இடையூறுகள் உற்பத்தி மீது தளர்வுறச் செய்யக்கூடிய தாக்கங்களைக் கொண்டிருந்தன. இதன் விளைவாக, உணவு, அணியும் ஆடைகள், குடிபானங்கள், புகையிலை உற்பத்திகள், இரசாயனம் மற்றும் இரசாயன உற்பத்திகள், உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள், மின்னியல் சாதனங்கள் போன்ற முக்கிய துணைத் துறைகளின் உற்பத்தி பாதிக்கப்பட்டது. எனினும், புடவைகள், ஏனைய உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்திகள், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள், சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள், தோல் மற்றும் அது தொடர்பான உற்பத்திகள், அடிப்படை உலோகங்கள் மற்றும் பொறிகள் மற்றும் கருவிகள் என்பனவற்றின் வெளியீடுகள் பரிசீலனைக்குரிய இக்காலப்பகுதியில் மேம்பட்டிருக்கின்றன.

- **2016இன் முதற்காலாண்டுப் பகுதியில் 0.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த தொழிற்சாலைக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணில் பாரிய துணைத் துறையாக விளங்கும் உணவு உற்பத்தித் துணைத் துறை இவ்வாண்டின் இரண்டாம் காலாண்டுப் பகுதியில் 4.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து 2016இன் முதலரைப் பகுதியில் 1.9 சதவீதம் கொண்ட ஒட்டுமொத்த வீழ்ச்சியொன்றினைத் தோற்றுவித்தது.** வெதுப்பக உற்பத்திகள், காய்கறிகள் மற்றும் விலங்கு எண்ணெய் மற்றும் பதனிடப்பட்டு பாதுகாக்கப்பட்ட இறைச்சி உற்பத்திகள் என்பன இக்காலப்பகுதியில் மெதுவடைந்தன. இத்துறைகள் இரண்டாம் காலாண்டுப் பகுதியில் உற்பத்திச் செயன்முறையைப் பாதித்த வழங்கல்பக்க இடையூறுகளினால் முக்கியமாகப் பாதிக்கப்பட்டன. எனினும், பாற்பண்ணை உற்பத்திகள், மக்கரோனி மற்றும் நூடில்ஸ், சீனி, சீனி இனிப்புப் உற்பத்திகள், தயாரிக்கப்பட்ட உணவு மற்றும் கறிவகைகள் அதேபோன்று தயாரிக்கப்பட்ட விலங்குத்தீன் உற்பத்திகள் என்பன இக்காலப்பகுதியில் அவற்றின் வெளியீட்டில் விரிவாக்கமொன்றினைப் பதிவுசெய்துள்ளன.

- **குடிவகை துணைத் துறை 10.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு இத்துணைத் துறையின் பெரும் வகையான சாராயம் அதேபோன்று பியர் என்பனவற்றின் தாழ்ந்த உற்பத்தியும் தேறல் செய்யப்பட்ட பால் உற்பத்தியின் குறைப்பும் ஒன்றாகச் சேர்ந்து முக்கிய காரணங்களாக விளங்கின.** எனினும், மென் குடிபானங்கள், கனிம மற்றும் போத்தலில் அடைக்கப்பட்ட நீர் துணைத் துறை முன்னைய ஆண்டின் முதலரைப் பகுதியுடன் ஒப்பிடுகையில் 7.8 சதவீதம் கொண்ட அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது. மேலும், 2016இன் முதலரைப் பகுதியில் புகையிலை உற்பத்தித் துணைத் துறையின் வெளியீடும் 3.2 சதவீதத்தினால் தேய்வடைந்தது. குறைந்த நுகர்வோர்

1. 2010இனை அடிப்படையாண்டாகக் கொண்டு தொழிற்சாலை கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணிலுள்ள ஒவ்வொரு கைத்தொழிலுக்கும் நிறையிடல்கள் வழங்கப்பட்டன. அன்றிலிருந்து பொருளாதார கட்டமைப்பின் கணிசமான மாற்றத்தால் அவதானிக்கப்பட்டவைகள் சார்பு ரீதியில் உயர்ந்தளவான நிறையிடல்களுடன் புதிய மற்றும் எழுச்சியடைந்துவரும் கைத்தொழில்களின் தேற்றத்திற்கு இட்டுச்சென்றிருந்த அதேவேளை மாதிரியில் தற்போது காணப்படுகின்ற கைத்தொழில்கள் சிலவற்றின் நிறையிடல்கள் வீழ்ச்சியடைந்துள்ளன. இவைகள் தொழிலாளர் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணுக்கான அடுத்தகட்ட சீராக்கங்களின் போது கருத்திற்கொள்ளப்படும்..

**வரைபடம் 2.4 தொழிற்சாலைக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்**




**வரைபடம் 2.5 தொழிற்சாலைக் கைத்தொழில் உற்பத்தி சுட்டெண்ணின் உள்ளடக்கம் - 2016 முதலரை**




கேள்வி 2016இன் தொடக்கப் பகுதியில் காணப்பட்ட விலை அதிகரிப்புடன் இணைந்து இச்சுருக்கத்திற்கு பங்களித்த முக்கிய காரணியாக விளங்கியது.

- **தொழிற்சாலைக் கைத்தொழில் உற்பத்தி சுட்டெண்ணின் இரண்டாவது பெரிய துணைத் துறையாக விளங்கும் அணியும் ஆடைகள் துணைத் துறை 2016இன் முதலரைப் பகுதியில் பின்னடைவுகளுக்குள்ளாகி 1.0 சதவீதம் கொண்ட எதிர்மறையான வளர்ச்சியை அறிவித்தது.** குறிப்பாக ஐக்கிய அமெரிக்காவிலிருந்தான ஆடை ஏற்றுமதிகளின் தெரிந்தெடுக்கப்பட்ட வகைகளுக்கான குறைந்த கேள்வி இத்துணைத் துறையின் மோசமான செயலாற்றத்திற்கு முக்கிய காரணமாக இருந்தது. எனினும், தரம், சரியான நேரம், நம்பகத்தன்மை, சமூக இணங்குவிப்புக்கள் போன்ற நியதிகளில் இலங்கை கொண்டிருக்கும் போட்டித்தன்மை கொண்ட பலம் நாட்டின் வர்த்தக அடையாளங்களுடன் இணைந்து நான்காம் காலாண்டில் ஆடை துணைத் துறை உத்வேகம் கொள்வதற்கு பக்கபலமாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. பொதுவாக்கப்பட்ட முறைமைகளின் முன்னுரிமை (+) வசதி 2017இல் மீண்டும் அடையப்படுமென்பதும் கைத்தொழில் மீது சாதகமான தாக்கமொன்றினைக் கொண்டிருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், மற்றைய நாடுகளிலிருந்து தோன்றும் அதிகரித்த போட்டித்தன்மைகளைக் கவனத்தில் கொள்கையில் புதிய சந்தைகளை கண்டறிவதற்கு தொடர்ச்சியான முயற்சிகளை மேற்கொள்வதும் தற்போதுள்ள சந்தைகளின் சந்தைப் பங்குகளை உயர்த்துவதற்கு உற்பத்திகளைப் பன்முகப்படுத்துவதும் விலை போட்டித்தன்மைகளை மேம்படுத்துவதற்கு உற்பத்திச் செலவுகளைச் சிக்கனப்படுத்துவதும் இத்துணைத் துறையின் எதிர்கால வளர்ச்சிக்கு இன்றியமையாதனவைகளாகும்.

- **2016இன் முதலரைப் பகுதியில் இரசாயனம் மற்றும் இரசாயன உற்பத்திகள் துணைத் துறையும் 18.9 சதவீதத்தினால் சுருக்கமடைந்தமைக்கு குறைந்த வளமாக்கி உற்பத்திகளே பெருமளவிற்குக் காரணமாகும்.** தொடர்பான காலப்பகுதியில் வளமாக்கித் தயாரிப்பு வீழ்ச்சியடைந்தமைக்கு முன்னைய திட்டத்திலிருந்து புதிய வளமாக்கி உதவுதொகைத் திட்டத்திற்கு நிலைமாறுகின்ற காலப்பகுதியில் இடம்பெற்ற சந்தைச் சீராக்கங்களின் சீராக்கமே காரணமாக அமைந்தன. எனினும், புதிய வளமாக்கி உதவுதொகைத் திட்டத்தின் கீழ் சந்தை உறுதியடைந்ததும் உற்பத்தி வழமைக்குத் திரும்புமென எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை, தீந்தைகள் மற்றும் வார்னிசுகள் என்பனவற்றின் மேம்பட்ட உற்பத்தி 2016இன் முதலரைப் பகுதியில் இரசாயனம் மற்றும் இரசாயன உற்பத்திகளின் துணைத் துறைக்கு சாதகமாகப் பங்களித்தன.

- **மின்வலுச் சாதனங்கள், துணைத் துறையின் குறைந்த செயலாற்றத்திற்கு உகண்டா, யோர்தான் போன்ற முக்கிய ஏற்றுமதி நாடுகளிலிருந்தான மின்கடத்திகளுக்கான கேள்வி வீழ்ச்சியடைந்தமையே முக்கிய காரணமாகும்.** 2016இன் முதலரைப் பகுதியில் இத்துணைத் துறை

ஏறத்தாழ 8.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. எனினும், புதிய பன்னாட்டுச் சந்தைகளை நாடுவதற்கு கைத்தொழிலினால் எடுக்கப்பட்ட வழிமுறைகளும் உற்பத்திகளை வெவ்வேறாகப் பிரித்தமையும் இக்கைத்தொழிலினை எதிர்காலத்தில் உத்வேகப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது.

- **கப்பல் கட்டுதல் மற்றும் திருத்தல் நடவடிக்கைகளை முக்கியமாக உள்ளடக்கிய உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் துணைத் துறை உற்பத்தியில் ஏற்பட்ட 38.7 சதவீதம் கொண்ட வீழ்ச்சியின் காரணமாக சரிவடைந்தது.** மசகெண்ணெய் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக ஆழ்கடலில் எண்ணெய் துளையிடும் தொழில்துறை பின்னடைந்தமை இக்காலப்பகுதியின் கப்பல் கட்டும் தொழிற்பாடுகளின் மீது மோசமான தாக்கமொன்றினைக் கொண்டிருந்தமைக்கு எண்ணெய் துளையிடும் கப்பல்களுக்கான கேள்வி குறைவடைந்தமையே காரணமாகும். எனினும், இந்து சமுத்திரத்தின் மையத்தில் இலங்கை உபாயம்மிக்க அமைவிடத்தில் அமைந்திருந்தமையானது ஆய்வுக்குரிய காலப்பகுதியில் கப்பல் திருத்தும் நடவடிக்கைகளை தொடர்ந்தும் கவரக்கூடியதாக இருந்தது.

- **2016இன் முதலரைப் பகுதியில் உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்திகள் துணைத் துறை நன்கு செயலாற்றியது.** முதல் மற்றும் இரண்டாம் காலாண்டுப் பகுதியில் சாதகமான செயலாற்றத்தினைக் கொண்டிருந்த துணைத் துறை 2016இன் முதலரைப் பகுதியில் 12.7 சதவீதம் கொண்ட ஒட்டுமொத்த வளர்ச்சியைப் பதிவுசெய்தமைக்கு கட்டடவாக்கத் துறையில் காணப்பட்ட வளர்ச்சி உத்வேகமே முக்கிய தூண்டுதலாக அமைந்தது. இத்துறையின் உற்பத்தியின் பிரதான பங்கினைக் கொண்டிருக்கும் சிமெந்தின் அதிகரித்த தயாரிப்பு இச்செயலாற்றத்திற்கு உதவிய முக்கிய பங்களிப்புக் காரணியாக காணப்பட்டது. மேலும், அதிகரித்த நுகர்வோர் கேள்வியின் விளைவாக களிமண் ஓடுகள் மற்றும் கூரைத் தகடுகள் என்பனவற்றின் தயாரிப்பும் குறிப்பிடத்தக்களவிற்கு விரிவடைந்தது. போர்சலீன் மற்றும் மட்பாண்ட உற்பத்திகளின் தயாரிப்பு, குறைந்த உள்நாட்டு மற்றும் பன்னாட்டுக் கேள்வியின் மத்தியில் தொடர்பான காலப்பகுதியில் சிறிதளவு வளர்ச்சியைப் பதிவுசெய்தது. மறுபுறுத்தில், இலங்கையில் கண்ணாடிப் போத்தல்களைத் தயாரிக்கின்ற தனியொரு தொழிற்சாலையின் உற்பத்தி இயலளவில் ஏற்பட்ட குறைப்பின் காரணமாக கண்ணாடி உற்பத்திகளின் தயாரிப்பு மெதுவாக வீழ்ச்சியடைந்தது.

- **அடிப்படை உலோக துணைத் துறையின் செயலாற்றம் 2016இன் முதலரைப் பகுதியில் பாராட்டத்தக்கதாகவிருந்ததுடன் 2015இல் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட எதிர்மறையான வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 43.3 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியை அறிவித்தது.** கட்டடவாக்கத் துறையின் சாதகமான செயலாற்றத்தினால் தூண்டப்பட்ட உருக்கு உற்பத்திகளின் அதிகரித்த உற்பத்தி இத்துணைத் துறையின் உயர்ந்த வளர்ச்சிக்கு பங்களித்தது.

- **2016இன் முதலரைப் பகுதியில் இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள் துணைத் துறை மிகச் சிறந்த செயலாற்றத்தினைக் காட்டி 2015இன் இதே காலப்பகுதியில் காணப்பட்ட மோசமான செயலாற்றத்திற்கு எதிராக 2.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளது.** 2016இன் முதலாம் மற்றும் இரண்டாம் காலாண்டுப் பகுதியில் இத்துணைத் துறை சாதகமான செயலாற்றத்தினைக் காட்டியது. உள்நாட்டுச் சந்தை அதேபோன்று பிரேசில், ஐக்கிய அமெரிக்கா போன்ற பன்னாட்டுச் சந்தைகள் இரண்டினதும் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான பினியுமற்றி ரயர்கள் அல்லது வானூர்தி ரயர்களின் அதிகரித்த உற்பத்தி இவ்வளர்ச்சிக்கான அடிப்படைக் காரணமாக இருந்தது. எனினும், திண்ம ரயர்களின் உற்பத்தி சிறிதளவு வீழ்ச்சியைக் காட்டியது. கைத்தொழில் மற்றும் அறுவைச் சிகிச்சை கையுறைகளுக்கான ஏற்றுமதிக் கேள்வியும் ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவிலுள்ள சந்தைகளுக்கான உயர்ந்த ஏற்றுமதிகளை குறிப்பிடத்தக்களவிற்கு விரிவாக்கின. தொழில்சார்ந்த பாதுகாப்பு மீதான அதிகரிக்கின்ற ஒழுங்குவிதிகள் அதேபோன்று உலகளாவிய ரீதியில் ஏற்பட்டு வரும், நலம் மற்றும் பாதுகாப்பு முன்னெச்சரிக்கை தொடர்பான அறிவுறுத்தல்கள் காரணமாக இறப்பரை அடிப்படையாகக் கொண்ட கையுறைகளின் கைத்தொழில் வளர்ச்சி உத்வேகத்தினைப் பேணுமென எதிர்பார்க்கப்படுகிறது.

- **2014இலிருந்து அறிவிக்கப்பட்ட எதிர்மறையான செயலாற்றத்திற்கு மாறாக தோல் மற்றும் அதனுடன் தொடர்பான உற்பத்திகளின் துணைத் துறை மீட்சியடைவதற்கான அறிகுறிகளைக் காட்டின.** 2016இன் முதல் இரண்டு காலாண்டுப் பகுதியிலும் உற்பத்தி அளவுகளில் வளர்ச்சியொன்று பதிவுசெய்யப்பட்டமையானது 2016இன் முதலரைப் பகுதியில் 16.8 சதவீதம் கொண்ட ஒட்டுமொத்த வளர்ச்சி வீதமொன்றினைத் தோற்றுவித்தது. இக்காலப்பகுதியில் முடிவடைந்த தோல் உற்பத்திகள் மற்றும் காலணிகளுக்கான கேள்வியில் அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது.

- **2016இன் முதலரைப் பகுதியில் புடவை துணைத் துறை சாதகமான செயலாற்றமொன்றினைக் காட்டி 5.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தது.** இத்துணைத் துறையின் உயர்ந்த உற்பத்திக்கு உள்ளூரில் தயாரிக்கப்பட்ட புடவைகளுக்கான உள்நாட்டுச் சந்தைக் கேள்வி முக்கிய தூண்டுதலாக அமைந்தது. எனினும், நிறமூட்டுதல் மற்றும் முடிவடைந்த பின்னப்பட்ட துணிகளுக்கு போதுமான வசதிகள் காணப்படாமையானது இக்கைத்தொழிலின் வளர்ச்சியைப் பாதித்தது.

- **இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சுத்திகரிப்பு உற்பத்தியை தனியே உள்ளடக்கிய சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள் துணைத் துறை 2016இன் முதலரைப் பகுதியில் 2015இன் இதே காலப்பகுதியில் காணப்பட்ட எதிர்மறையான செயலாற்றத்துடன் ஒப்பிடுகையில் 32.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.** திருத்தல் மற்றும் பேணல்களுக்காக 2015இன் இதே காலப்பகுதியில் ஒரு சில வாரங்கள் இது மூடப்பட்டமைக்கு மாறாக 2016இன் முதலரைப் பகுதியில் எவ்வித தடங்கலுமின்றி சுத்திகரிப்புச் செயன்முறைகள் தொடர்ந்தமை இவ்வதிகரிப்பினைத் தோற்றுவித்தது. எனவே, சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளில் காணப்பட்ட வளர்ச்சி தளத் தாக்கத்தினைப் பிரதிபலித்தது.

- **கைத்தொழில் துறையானது அமைச்சுக்கள் மற்றும் ஏனைய அரச துறை நிறுவனங்களின் ஊடாக அரசாங்கத்தின் உதவியினைத் தொடர்ந்தும் பெற்று வருகின்றது.** பிரதேச கைத்தொழில் மயமாக்கல் மற்றும் தொழில் வாய்ப்புக்களை மேம்படுத்துவதற்கு பிரதேச மட்டங்களில் கைத்தொழில் துறை முதலீடுகளை ஊக்குவிக்கும் நோக்குடன் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் பிரதேச அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் 2016இன் முதலரைப் பகுதியில் மேலும் தொடர்ந்தன. திருகோணமலை (கட்டம் II) மற்றும் மட்டக்களப்பு கைத்தொழில் பேட்டைகள் தொடர்பான உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளின் பெரும் பங்கு நிறைவடைந்துள்ளன. மன்னார் கைத்தொழில் பேட்டை தொடர்பான அபிவிருத்தி நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் 2015 திசெம்பரில் ஆரம்பிக்கப்பட்ட வெலி ஓயா 2 தொழிற்சாலைக் கட்டடங்களின் கட்டுமானத்துடன் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. 2016இன் வரவு செலவுத்திட்டத்துடன் இசைந்து செல்லும் விதத்தில் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு திருகோணமலை, ரைகம, மகா ஓயா மற்றும் அம்பாந்தோட்டையில் 4 புதிய கைத்தொழில் பேட்டைகளுடன் தொடர்பான ஆரம்ப வேலைகளை கைத்தொழில் வர்த்தக அமைச்சு ஆரம்பித்துள்ளது. தேசிய தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அதிகாரசபை தொழில்முயற்சியாண்மையாளர்களுக்கு வியாபார அபிவிருத்திப் பணிகளை வழங்குவதற்காக சரியான பொறிமுறை யொன்றினை உருவாக்கும் பொருட்டு மாவட்ட மற்றும் பிரதேச செயலக மட்டங்களில் மாவட்ட மற்றும் பிராந்திய தொழில்முயற்சிகள் அரங்குகளை தொடர்ந்தும் நிறுவியது. தேசிய தொழில்முயற்சி அதிகாரசபையின் நிகழ்ச்சித்திட்டமான பிரதேச தொழில்முயற்சி அபிவிருத்தியின் கீழ் தொழில்முயற்சியாண்மை மற்றும் தொழில்நுட்பம், சந்தைப்படுத்தல் மற்றும் பதிவேடுகளைப் பேணும் தேர்ச்சி போன்றவற்றின் மீது பிரதேச மட்டங்களில் தெரிவுசெய்யப்பட்ட புதிய மற்றும் ஏற்கனவேயுள்ள தொழில்முயற்சியாண்மையாளர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது.

## பணிகள்

- **2016இன் முதலரைப் பகுதியில் பணிகளுடன் தொடர்பான பொருளாதார நடவடிக்கைகள் 2015இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 6.2 சதவீதமான வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 4.9 சதவீதத்தினால் விரிவடைந்தது.** 2016ஆம் ஆண்டின்

இரண்டாம் காலாண்டுப் பகுதியில் நலக் கவனிப்புப் பணிகள் போன்ற சில பொருளாதார நடவடிக்கைகளின் மீது பெறுமதிசேர் வரி விதிக்கப்பட்டமை மற்றும் பெறுமதிசேர் வரி வீதங்கள் அதிகரித்தமை என்பன பணிகள் நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த வளர்ச்சியின் மீது சில தாக்கங்களைக் கொண்டிருந்தன. பணிகள் நடவடிக்கைகளில் பதிவுசெய்யப்பட்ட வளர்ச்சிக்கு நிதியியல் பணிகள் நடவடிக்கைகளில் காணப்பட்ட திரட்சியான விரிவாக்கமே பெருமளவிற்கு ஆதரவாக இருந்தது. மேலும், மொத்த விற்பனை மற்றும் சில்லறை விற்பனை, ஏனைய தனியாள் பணி நடவடிக்கைகள், அரச பணிகள் தொடர்பான நடவடிக்கைகள், போக்குவரத்து நடவடிக்கைகள், கல்வி நடவடிக்கைகள், வதிவிடச் சொத்துடமை உள்ளடங்கலான உண்மைச் சொத்து நடவடிக்கைகள், காப்புறுதி நடவடிக்கைகள் மற்றும் தொலைத்தொடர்பூட்டல் பணிகள் என்பன பணிகள் தொடர்பான நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு சாதகமான முறையில் பங்களித்துள்ளன. எனினும், தொழில்சார் நிபுணத்துவப் பணிகள் மற்றும் நிகழ்ச்சிப்படுத்தல் மற்றும் ஒலிபரப்புப் பணிகள் இக்காலப்பகுதியில் சுருக்கமடைந்தன.

### மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம், போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல், தங்குமிட வசதி மற்றும் உணவுப் பணி நடவடிக்கைகள்

- **பணிகள் நடவடிக்கைகளின் முக்கிய பங்கிற்கு வகைகூறும் மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம், போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல், தங்குமிட வசதி மற்றும் உணவுப் பணி நடவடிக்கைகள் 2015இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 5.6 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டின் முதலரைப் பகுதியில் 3.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன.** இவ்வளர்ச்சிக்கு 2015ஆம் ஆண்டின் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 1.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இன் முதலரைப் பகுதியில் 4.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தக நடவடிக்கைகளில் ஏற்பட்ட விரிவாக்கம் பெருமளவிற்கு உதவியது. மேலும், களஞ்சியசாலை நடவடிக்கைகள் மற்றும் தங்குமிட வசதிகள், உணவு மற்றும் குடிபான பணி நடவடிக்கைகள் என்பனவற்றை உள்ளடக்கிய பொருட்கள் மற்றும் பயணிகள் போக்குவரத்து 2015இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட முறையே 11.4 சதவீதம் மற்றும் 1.9 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இக்காலப்பகுதியில் முறையே 2.1 சதவீதத்தினாலும் 3.7 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்தன. அதேவேளை, ஆண்டின் முதலரைப் பகுதியில் அஞ்சல் மற்றும் கூரியர் நடவடிக்கைகள் 0.9 சதவீதத்தினால் சிறிதளவில் வளர்ச்சியடைந்து 2015இன் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 6.6 சதவீதச் சுருக்கத்திலிருந்தும் மீட்சியடைந்தது.

### தகவல் மற்றும் தொடர்பூட்டல்

- **ஆண்டின் முதலரைப்பகுதியில் தகவல் மற்றும் தொடர்பூட்டல் நடவடிக்கைகள் 2015இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 14.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 15.2 சதவீதத்தினால் தொடர்ந்தும் வளர்ச்சியடைந்தன.** 2015இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 10.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இன் முதலரைப் பகுதியில் தொலைத்தொடர்பூட்டல் நடவடிக்கைகளில் ஏற்பட்ட 21.0 சதவீதமான குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு இவ்வளர்ச்சிக்கு முக்கியமாகப் பங்களித்தது. எனினும், தகவல் தொழில்நுட்ப நிகழ்ச்சிப்படுத்தல் ஆலோசனை மற்றும் அதனுடன் தொடர்பான நடவடிக்கைகள் 2015இன் தொடர்பான காலப்பகுதியில் அவதானிக்கப்பட்ட 29.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இக்காலப்பகுதியில் 3.7 சதவீதத்திற்கு மெதுவடைந்தன. அதேநேரம் நிகழ்ச்சித்திட்டப்படுத்தல் மற்றும் ஒலிபரப்பு நடவடிக்கைகள் அத்துடன் செவிப்புல/ கட்புல தயாரிப்பு நடவடிக்கைகள் 2015இன் முதலரைப் பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 6.0 சதவீத வளர்ச்சிக்கெதிராக இக்காலப்பகுதியில் 2.4 சதவீதத்தினால் சுருக்கமடைந்தன.

### நிதியியல், காப்புறுதி மற்றும் வதிவிடச் சொத்துடமை உள்ளிட்ட உண்மைச் சொத்து நடவடிக்கைகள்

- **ஆண்டின் முதலரைப் பகுதியில் நிதியியல், காப்புறுதி மற்றும் வீடுகளின் வதிவிடச் சொத்துடமை உள்ளிட்ட உண்மைச் சொத்து நடவடிக்கைகள் 2015இன் தொடர்பான காலப்பகுதியில் காணப்பட்ட 13.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 8.7 சதவீதத்தினால்**

**வளர்ச்சியடைந்தன.** பதிவுசெய்யப்பட்ட வளர்ச்சிக்கு 2015இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 15.6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இன் முதலரைப் பகுதியில் 15.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த நிதியியல் பணி நடவடிக்கைகள் மற்றும் துணை நிதியியல் பணிகளின் தொடர்ச்சியான விரிவாக்கமே பெருமளவிற்குக் காரணமாகும். 2016 யூன் இறுதியளவில் நாணய அளவீட்டின்படி 28.2 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியடைந்த தனியார் துறைக் கொடுகடன் மற்றும் 17.3 சதவீதத்தினால் தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்த வங்கித்தொழில் துறையின் கடன்கள் மற்றும் வைப்புக்கள் என்பன நிதியியல் பணி நடவடிக்கைகளிலான தொடர்ச்சியான விரிவாக்கத்தைப் பிரதிபலித்தன. அதேவேளை, காப்புறுதி, மீள்காப்புறுதி மற்றும் ஓய்வூதிய நிதியியல் நடவடிக்கைகள் 2015இன் முதலரைப் பகுதியில் பதிவுசெய்த 4.5 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 13.4 சதவீதத்தினால் கணிசமாக வளர்ச்சியடைந்தது. எனினும், வதிவிடச் சொத்துடமை உள்ளிட்ட உண்மைச் சொத்து நடவடிக்கைகள் 2015இன் தொடர்பான காலப்பகுதியில் காணப்பட்ட 13.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இன் முதலரைப் பகுதியில் 1.8 சதவீதத்தினால் மெதுவடைந்து துணைப் பிரிவின் ஒட்டுமொத்த வளர்ச்சியை மிதப்படுத்தியது.

### தொழில்சார் நிபுணத்துவப் பணிகள் மற்றும் ஏனைய தனியாள் பணி நடவடிக்கைகள்

- **தொழில்சார் நிபுணத்துவப் பணிகள் மற்றும் ஏனைய தனியாள் பணி நடவடிக்கைகள் 2015இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 1.6 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டின் முதலரைப் பகுதியில் 2.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.** இவ்வளர்ச்சிக்கு 2015இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 3.0 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இக்காலப்பகுதியில் 4.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த ஏனைய தனியாள் பணி நடவடிக்கைகளில் ஏற்பட்ட தொடர்ச்சியான விரிவாக்கம் உந்துதலாக விளங்கியது. அதேவேளை, தொழில்சார் நிபுணத்துவப் பணிகள் 2015இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 5.2 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் ஆண்டின் முதலரைப் பகுதியில் 5.4 சதவீதத்தினால் மேலும் சுருக்கமடைந்தது.

### பொது நிருவாகம், பாதுகாப்பு, கல்வி, மனித நலம் மற்றும் சமூகப் பணி நடவடிக்கைகள்

- **ஆண்டின் முதலரைப் பகுதியில் பொது நிருவாகம், பாதுகாப்பு, கல்வி, மனித நலம் மற்றும் சமூகப் பணி நடவடிக்கைகள் 2015இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 3.5 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 5.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன.** 2016இன் முதலரைப் பகுதியில் பொது நிருவாகம், பாதுகாப்பு, கட்டாய சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள், 2015இன் தொடர்பான காலப்பகுதியில் காணப்பட்ட 7.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 5.2 சதவீதத்தினால் விரிவடைந்தன. அதேவேளை, இவ்வாண்டின் முதலரைப் பகுதியில் கல்விப் பணிகள் 2015இன் அதே காலப்பகுதியில் காணப்பட்ட 9.7 சதவீத சுருக்கத்திலிருந்து மீட்சியடைந்து 8.1 சதவீதத்தினால் விரிவடைந்தது. மேலும், மனித நலம், வதிவிட நலக் கவனிப்பு மற்றும் சமூகப் பணி நடவடிக்கைகள் 2015இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 9.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இக்காலப்பகுதியில் 5.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன.

### செலவினம்

- **2016இன் முதலரைப் பகுதியில் உள்நாட்டுப் பொருளாதாரத்தினால் உருவாக்கப்பட்ட கேள்வியான மொத்த உள்நாட்டுச் செலவினம் பெயரளவு நியதிகளில் 2015இன் முதலரைப் பகுதியின் 8.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 8.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.** இது, முதலீட்டுச் செலவினத்தில் ஏற்பட்ட 14.2 சதவீதம் கொண்ட வளர்ச்சி மற்றும் நுகர்வுச் செலவினத்தில் ஏற்பட்ட 6.7 சதவீதம் கொண்ட வளர்ச்சி என்பனவற்றின் இணைந்த விளைவாகும். அதேவேளை, 2016இன் முதலரைப் பகுதியில் தேறிய வெளிநாட்டுக் கேள்வி 6.0 சதவீதம் கொண்ட சுருக்கத்தினை எடுத்துக்காட்டியது. இதன்படி, 2016இன் முதலரைப் பகுதியில் உள்நாட்டு மற்றும் தேறிய வெளிநாட்டுக் கேள்விகளின் கூட்டுத்தொகையான மொ.உ.உற்பத்தி பெயரளவு நியதிகளில் 2015இன் முதலரைப் பகுதியின் 7.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 9.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.

- **பெயரளவு நியதிகளில் 2016 இற்கான மொத்த உள்நாட்டுச் செலவினம் 2015இன் 6.5 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 9.7 சதவீதத்தினால் ரூ.13,180 பில்லியனுக்கு வளர்ச்சியடையுமென எறிவுசெய்யப்பட்டது.** இவ்வளர்ச்சியானது முதலீட்டுச் செலவினத்தில் ஏற்பட்ட மீளெழுச்சி மற்றும் நுகர்வுச் செலவினத்தில் ஏற்பட்ட வளர்ச்சி என்பனவற்றின் தூண்டுதலால் ஏற்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. 2016 காலப்பகுதியில் ஏற்றுமதிகளுடன் ஒப்பிடுகையில் இறக்குமதி மீதான செலவினத்திலான உயர் வளர்ச்சி எதிர்பார்க்கப்படுவதன் காரணமாக தேறிய வெளிநாட்டுக் கேள்வி 2015இல் பதிவுசெய்யப்பட்ட சிறிதளவு வளர்ச்சிக்கெதிராக 2016இல் ரூபா நியதிகளில் சுருக்கமடையுமென எதிர்பார்க்கப்பட்டது. இதன் விளைவாக, நடைமுறைச் சந்தை விலைகளில் மொ.உ.உற்பத்தி 2015இன் 7.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2016இல் ரூ.12,275 பில்லியனுக்கு 9.8 சதவீதத்தினால் வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

### நுகர்வு

- **பொருளாதாரத்தின் பிரதான செலவினக் கூறான நுகர்வுச் செலவினம் 2015இல் பதிவுசெய்யப்பட்ட 8.9 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இல் பெயரளவு நியதிகளில் 9.3 சதவீதத்தினால் ரூ.9,460 பில்லியனுக்கு வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.** நுகர்வுச் செலவினத்திலான வளர்ச்சி தனியார் துறையினால் தூண்டப்படுமென எதிர்பார்க்கப்படும் அதேவேளையில் அரச செலவினம் 2016இன் எஞ்சிய காலப்பகுதியில் தொடர்ந்தும் மிதமாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

- **2016இல் நுகர்வுச் செலவினத்தின் முக்கிய பங்களிப்பாளராக விளங்கும் தனியார் நுகர்வு 2015இன் 8.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 11.0 சதவீதத்தினால் வளர்ச்சியடையுமென எறிவுசெய்யப்பட்டது.** தனியார் நுகர்வு நடவடிக்கைகளின் வளர்ச்சிக்கு, தொழிலாளர் சட்டத்தின் வரவு செலவுத்திட்ட நிவாரணப் படிகளுக்கிணங்கவும் தேசிய கூலிநிர்ணயத்துடன் தொடர்பாக விதிக்கப்பட்ட சட்ட ஏற்பாடுகளுக்கிணங்கவும் தனியார் துறை ஊழியர்களுக்கென செய்யப்பட்ட சம்பளத் திருத்தங்கள் உதவியாக அமைந்தன. தனியார் துறைக் கூலிகளில் காணப்பட்ட தொடர்பான அதிகரிப்பு மத்திய வங்கியினால் நடாத்தப்பட்ட வியாபார அளவீடுகளில் பங்குபற்றிய பங்கேற்பாளர்களினால் வழங்கப்பட்ட உள்ளீட்டுச் செலவின் அதிகரிப்பிற்கான முக்கிய காரணியாக அடையாளம் காணப்பட்டிருக்கிறது. இருப்பினும் கூட, அண்மைய நாணய கொள்கை வழிமுறைகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் வட்டி வீதங்களில் படிப்படியான அதிகரிப்பு எதிர்பார்க்கப்பட்டமையும் மறைமுக வரிகள் மற்றும் இறக்குமதித் தீர்வைகளில் ஏற்பட்ட அதிகரிப்பும் இவ்வாண்டுப் பகுதியில் தனியார் நுகர்வில் காணப்படக்கூடிய சாத்தியமான வளர்ச்சியை மிதமாக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இது, 2016இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் நுகர்வுப் பொருட்களின் இறக்குமதி வர்த்தகச் சுட்டெண் சுருக்கமடைந்தமையின் மூலம் ஓரளவிற்கு பிரதிபலிக்கப்பட்டிருக்கிறது.

- **இறை திரட்சிக்கான கட்டுப்பாடுகளுடன் இசைந்து செல்லும் விதத்தில், அரச நுகர்வுச் செலவினம் 2015இல் பதிவுசெய்யப்பட்ட 13.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016ஆம் ஆண்டுப் பகுதியில் 3.9 சதவீதத்தினால் சுருக்கமடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.** அரச மீண்டெழும் செலவினத்தில் குறிப்பிடத்தக்களவு பங்கினை ஒன்றுசேர்ந்து பிரசன்னப்படுத்தும் சம்பளங்கள் மற்றும் கூலிகள் மற்றும் பொருட்கள் மற்றும் பணிகள் மீதான செலவினம் என்பன வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளின்படி 2015இல் பதிவுசெய்யப்பட்ட 35.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டுப்

**வரைபடம் 2.6 உள்நாட்டு கேள்வியின் உள்ளடக்கம் -2016(அ)**




(அ) நடுத்தரகால பேரண்டப்பொருளாதார சட்டகத்தின் அடிப்படையிலான இலங்கை மத்திய வங்கியின் எறிவுகள்

பகுதியில் 6.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. இது தொடர்பில், சம்பளங்கள் மற்றும் கூலிகள் மீதான அரச துறைச் செலவினம் 5.0 சதவீதத்தினால் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்ற வேளையில் பொருட்கள் மற்றும் பணிகளின் ஏனைய கொள்வனவுகள் மீதான செலவினம் 2016ஆம் ஆண்டுப் பகுதியில் 36.9 சதவீதத்தினால் சுருக்கமடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## முதலீடு

- **2016இல் முதலீட்டுச் செலவினம் 2015இல் பதிவுசெய்யப்பட்ட 0.6 சதவீதம் கொண்ட சிறிதளவு வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் பெயரளவு நியதிகளில் ரூ.3,719 பில்லியனுக்கு 10.6 சதவீதத்தினால் உத்வேகமடையுமென எறிவு செய்யப்பட்டிருக்கிறது.** தனியார் முதலீட்டுச் செலவினம் இவ்வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்களவிற்குப் பங்களிக்குமென எதிர்பார்க்கப்படுகின்ற வேளையில் அரச முதலீட்டுச் செலவினம் அரசின் வருடாந்த வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளுக்கிணங்க வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. இக்காலப்பகுதியில் சிமெந்தின் கிடைப்பனவு மற்றும் கட்டட மூலப்பொருட்களின் இறக்குமதி என்பனவற்றில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பினால் பிரதிபலிக்கப்பட்டவாறு ஆண்டின் முதலரைப் பகுதியில் கட்டடவாக்க நடவடிக்கைகள் உறுதியான மீட்சியைக் காட்டின. மேலும், 2016 யூன் இறுதியில் வர்த்தக வங்கிகளிலிருந்தான தனியாள் வீடமைப்பிற்கான தனியார் துறைக் கொடுகடன் முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 41.7 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேவேளை, ஆண்டின் முதல் எட்டு மாத காலப்பகுதிக்கான வர்த்தகச் சுட்டெண்களினால் காட்டப்பட்டவாறு பொறிகள் மற்றும் கருவிகள் மற்றும் ஏனைய முதலீட்டுப் பொருள் வகைகளின் இறக்குமதியும் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. இச்சாதகமான அபிவிருத்திகள் ஆண்டு முழுவதும் தொடர்ந்து 2016இல் முதலீட்டு வளர்ச்சிக்கு உதவுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதன்படி, 2016இல் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக முதலீட்டுச் செலவினம் 2015இன் 30.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 30.3 சதவீதத்திற்கு அதிகரிக்குமென எறிவுசெய்யப்பட்டது. எனினும், தொழில் சந்தைத் தடங்கல்கள் மற்றும் கொள்கை பணிப்புரைகளில் அடிக்கடி தோன்றும் மாற்றங்களிலிருந்து உருவாகும் நிச்சயமற்ற தன்மை என்பன பொருளாதாரத்தின் சாத்தியமான முதலீட்டுத் தூண்டுதல்களை மழுங்கச் செய்துவிடக்கூடும். இது, மத்திய வங்கியினால் வியாபார அளவீடுகளில் எடுத்துக்காட்டப்பட்டவாறு நிலைத்திருக்கக்கூடிய வளர்ச்சியின் உயர்ந்த வேகத்திற்கு முக்கிய தடையாக விளங்கும்.

- **2016இன் முதலரைப் பகுதியில் முதலீட்டுச் சபையில் பதிவுசெய்யப்பட்ட கம்பனிகளுக்கான கடன்கள் உட்பட வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல்கள் 2015இன் முதலரைப் பகுதியின் ஐ.அ.டொலர் 515.1 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 332.2 மில்லியனாக விளங்கி ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 35.5 சதவீத வீழ்ச்சியைப் பதிவுசெய்தது.** உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்கள், பணிகள் மற்றும் தயாரிப்புத் துறை என்பனவற்றுடன் தொடர்பான வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல்கள் முறையே 43.3 சதவீதத்தினாலும் 24.6 சதவீதத்தினாலும் 35.3 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. இக்காலப்பகுதியில் பெரும்பான்மையான வெளிநாட்டு நேரடி முதலீடுகள் பணிகள் தொடர்பான செயற்றிட்டங்களின் பேரில் காணப்பட்டதுடன் இவை மொத்த வெளிநாட்டு நேரடி முதலீடுகளில் ஏறத்தாழ 36 சதவீதத்தினை பிரதிநிதித்துவம் செய்தன (ஐ.அ.டொலர் 120.3 மில்லியன்). உட்கட்டமைப்புத் துறையில் காணப்பட்ட வெளிநாட்டு நேரடி முதலீடுகள் மொத்த வெளிநாட்டு நேரடி உட்பாய்ச்சல்களில் ஏறத்தாழ 35

**வரைபடம் 2.7 மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக முதலீடு மற்றும் சேமிப்புக்கள்(அ)**




(அ) தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் மீள் திருத்தப்பட்ட அடிப்படை ஆண்டிற்கான 2010 மொ.உ.உ. மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது.
(ஆ) நடுத்தரகால பேரண்டப்பொருளாதார சட்டகத்தின் அடிப்படையிலான இலங்கை மத்திய வங்கியின் மதிப்பீடுகள்

**வரைபடம் 2.8 முதலீட்டுச் சபை தொழில் முயற்சியாளர்களின்* வெளிநாட்டு நேரடி முதலீடு (ஐ.அ.டொலர் மில்லியன்)**




* கடன்கள் உள்ளடங்கலாக

சதவீதமாக விளங்கியவிடத்து (ஐ.அ.டொலர் 116.1 மில்லியன்) தயாரிப்புத் துறையின் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் ஐ.அ.டொலர் 95.7 மில்லியனாக விளங்கி 2016இன் முதலரைப் பகுதியின் மொத்த வெளிநாட்டு நேரடி முதலீடுகளில் ஏறத்தாழ 29 சதவீதத்தினை பிரசன்னப்படுத்தியது.

## சேமிப்புக்கள்

- **2016இல் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக உள்நாட்டுச் சேமிப்புக்கள் 2015இன் 22.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 22.9 சதவீதத்திற்கு அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.** வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளின்படி உள்நாட்டுச் சேமிப்புக்களில் எதிர்பார்க்கப்பட்ட முன்னேற்றங்களுக்குப் பங்களிக்கின்ற விதத்தில் அரச துறையின் குறைச் சேமிப்புக்கள் குறைவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை, ரூபா நியதிகளில் உலகின் எஞ்சிய பகுதிகளிலிருந்து வரக்கூடிய தேறிய முதன்மை வருமானம் மெதுவான வீதத்தில் குறைவடையுமென எதிர்பார்க்கப்பட்ட வேளையில் தேறிய நடைமுறை மாற்றல்கள் 2015 உடன் ஒப்பிடுகையில் 2016இல் நியாயமான உயர்ந்த வேகத்தில் வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதன் விளைவாக தேசிய சேமிப்புக்கள் 2015இல் பதிவுசெய்யப்பட்ட 27.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் மொ.உ.உற்பத்தியில் எதிர்பார்க்கப்படும் அபிவிருத்திகள் 27.8 சதவீதத்திற்கு உயர்வடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## எதிர்பார்க்கப்படும் அபிவிருத்திகள்

- **நடுத்தர காலப் பேரண்டப் பொருளாதார கட்டமைப்பின் கீழ் எறிவு செய்யப்பட்டவாறு, 2017இல் பொருளாதாரம் உண்மை நியதிகளில் ஏறத்தாழ 6.3 சதவீதத்தினால் வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.** வளர்ச்சியானது பரந்த தளத்தினைக் கொண்டிருக்குமெனவும் உற்பத்திப் பக்கத்திலுள்ள அனைத்து மூன்று முக்கிய பொருளாதார நடவடிக்கைகளினாலும் ஆதரவளிக்கப்படுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. சாதகமான வானிலை நிலைமைகள் காணப்படுமிடத்து, 2017இல் வேளாண்மை நிலைமைகள் மீண்டும் உத்வேகம் பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது. பணிகளும் கைத்தொழில் நடவடிக்கைகளும் கூட 2017இல் தமது சாதகமான வளர்ச்சி வேகத்தினைத் தொடருமென எதிர்பார்க்கப்படுகிறது.

- **வேளாண்மை நடவடிக்கைகள் 2017இல் மீட்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.** 2016இன் மூன்றாம் காலாண்டின் இறுதிப்பகுதி மற்றும் நான்காம் காலாண்டின் தொடக்கப் பகுதியில் நிலவும் வரட்சி நிலைமைகளினால் 2016/17 பெரும்போகத்தில் நெல் உற்பத்தி பாதிக்கப்படக் கூடுமெனினும் 2017 சிறுபோகத்தின் உற்பத்தி அதிகரிக்கக்கூடும். உலகளாவிய சந்தையில் பண்ட விலைகளில் ஏற்படும் படிப்படியான முன்னேற்றம் முக்கியமாக ஏற்றுமதிப் பயிர்களைப் பயிரிடும் உள்நாட்டு வேளாண்மையாளர்களை ஊக்குவிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. உள்நாட்டு மற்றும் உலகளாவிய நிலைமைகளின் காரணமாக தொடர்ந்தும் பின்னடைவுகளுக்கு உள்ளாகிவரும் தேயிலைத்துறை ருஷியா மற்றும் மத்திய கிழக்கு பொருளாதாரங்கள் இரண்டிலும் எதிர்பார்க்கப்படும் முன்னேற்றங்களுடன் சேர்ந்து உலகளாவிய சந்தையில் கிடைக்கும் மேம்பட்ட தேயிலை விலைகளின் ஆதரவுடன் மீட்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. இது அண்மைய மாதங்களில் தேயிலை விலைகள் படிப்படியாக அதிகரிக்கத் தொடங்கிய உள்நாட்டுச் சந்தைகளில் படிப்படியாகப் பிரதிபலிக்கப்பட்டு வருவதுடன் இது இத்தொழில்துறைக்கு தூண்டுதலையும் வழங்கும். அதேவேளை, இறப்பர் துறையும் 2017இல் இதே போக்கினைத் தொடருமென எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், இத்துறையின்

உற்பத்தித்திறனை உயர்த்துவதற்குப் பொருத்தமான வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் இப்போக்கினை மாற்றியமைக்க முடியும். மேலும், இறப்பரின் பெறுமதிகூட்டலை உயர்த்தும் நோக்குடன் பொதுவான இறப்பர் பதனிடுகின்ற நிலையங்களை நிறுவுதல் வேண்டும். இது வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களை மேம்படுத்த உதவும். உள்ளூர் சந்தையில் அதிகரித்த உற்பத்திச் செலவும் தாழ்ந்த பன்னாட்டு இறப்பரின் விலைகளும் உலகளாவிய சந்தைகளிலிருந்து உயர்ந்தளவு இறப்பர் இறக்குமதி செய்யப்படுவதற்கு வழிவகுத்தது. இதன் விளைவாக, உலகளாவிய சந்தைகளிலிருந்து தாழ்ந்த விலைகளில் இறப்பர் மூலப்பொருட்கள் கிடைப்பதன் மூலம் உள்நாட்டு இறப்பர் கைத்தொழில் நன்மைகளைப் பெறும். அதேவேளை, இலங்கையில் உற்பத்தி செய்யப்படுகின்ற தெங்கினை அடிப்படையாகக் கொண்ட பண்டங்களுக்கான அதிகரிக்கின்ற உலகளாவிய கேள்வி தொடருமெனவும் இப்போக்கு உள்நாட்டு தெங்கு கைத்தொழிலுக்குக் கூடுதலான தூண்டுதலை வழங்குமெனவும் அதன் மூலம் 2017இல் இத்துறையின் உயர்ந்த வளர்ச்சிக்கு மேலும் வசதியளிக்கப்படுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், 2016இன் பின்னரைப் பகுதியில் நிலவும் வரண்ட நிலைமைகள் உற்பத்தியைப் பாதிக்கக்கூடும். சோளம், குரக்கன், சோயா அவரை, உழுந்து மற்றும் பயறு போன்ற பல களப் பயிர்களின் உற்பத்தி சாதகமான வானிலை நிலைமைகளின் உதவியுடன் அவற்றின் வளர்ச்சிப் போக்கினைத் தொடருமென எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், உள்நாட்டுப் பால் உற்பத்தியினை உயர்த்துவதற்கு அரசாங்கம் எடுத்துவரும் தொடர்ச்சியான முயற்சிகளின் காரணமாக உள்நாட்டு பால் உற்பத்திகள் 2017இன் உள்நாட்டுத் தேவைப்பாட்டில் ஏறத்தாழ 58 சதவீதத்தினைப் பூர்த்திசெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆண்டு முழுவதும் கரும்பினை கிடைக்கச் செய்யக்கூடிய புதிய வியாபாரச் செய்கைத் திட்டத்தின் உதவியுடன் நாட்டின் தேவைப்பாட்டில் ஏறத்தாழ 14 சதவீதத்தினை சீனி உற்பத்தி பூர்த்திசெய்யும். ஐரோப்பிய சந்தைகளுக்கான மீன் ஏற்றுமதிகள் தடைசெய்யப்பட்டமையின் காரணமாக மந்தமான போக்கினைக் கொண்டிருந்த மீன்பிடித் துறை ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை நீக்கப்படுவதனைத் தொடர்ந்து 2017இல் அதன் உள்ளார்ந்த வளர்ச்சியை மீண்டும் தொடங்கும். மேலும், கடந்த அண்மைக் காலத்தில் அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட புதிய முன்னெடுப்புக்களும் 2017இல் மீன்பிடித் துறையின் வீரியம்மிக்க வளர்ச்சிக்கு மேலும் தூண்டுதலை வழங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

- **கைத்தொழிலுடன் தொடர்பான பொருளாதார நடவடிக்கைகள் 2017இல் அதன் சாதகமான வளர்ச்சிப் போக்கினைத் தொடருமென எதிர்பார்க்கப்படுகிறது.** கைத்தொழில் நடவடிக்கைகளுக்கான முக்கிய பங்களிப்பாளராக விளங்கும் தயாரிப்பு நடவடிக்கைகள் தற்போதைய வளர்ச்சி வேகத்தினை விரைவுபடுத்துவதற்கு அதிகரித்தளவில் பங்களிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், நலிவடைந்த உலகளாவிய கேள்வி தொடர்ந்தும் நிலவுமென எதிர்பார்க்கப்படுகின்றமையானது முக்கிய சில ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்களை மோசமாகப் பாதிக்கும். இருப்பினும் கூட, எதிர்பார்க்கப்படும் உயர்ந்தமட்ட நேரடி வெளிநாட்டு முதலீடுகளுடன் ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்களுக்காக கைத்தொழில் மற்றும் பொருளாதார வலயங்களை அபிவிருத்தி செய்யும் நோக்கில் எடுக்கப்பட்ட வழிமுறைகள் தயாரிப்புத் துறை நடவடிக்கைகளை உத்வேகப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், ஏற்றுமதிச் செயலாற்றத்தினை உத்வேகப்படுத்துவதற்கு சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை மேற்கொள்ள தொடர்ந்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட் வேளையில், அனைத்தையுமுள்ளடக்கிய வளர்ச்சி உபாயத்தின் ஊக்குவிப்புடன் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளிலிருந்தான பங்களிப்பு அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. முக்கியமாக பொருளாதார மற்றும் அரசியல் உறுதிப்பாட்டின் தூண்டுதலினால் முதலீட்டாளர் நம்பிக்கையில் ஏற்பட்ட முன்னேற்றம் மற்றும் தூண்டுதலளிக்கும் சூழலொன்றினை வழங்கும் கடப்பாடு என்பன தயாரிப்பு நடவடிக்கைகளின் முதலீடுகளை அதிகரித்து தூண்டுதலளிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை, மேற்கு பிரதேச பெருநகர் செயற்றிட்டம் மற்றும் கொழும்பு பன்னாட்டு நிதியியல் நகரம், மாத்தறை - அம்பாந்தோட்டை வரையான தென்பகுதி விரைவுப்பாதை விரிவாக்கச் செயற்றிட்டம் மற்றும் வெளிச்சுற்று நெடுஞ்சாலைச் செயற்றிட்டம் - கட்டம் III என்பனவற்றுடன் சேர்ந்த மத்திய விரைவுப்பாதைச் செயற்றிட்டம் போன்ற

பாரிய அளவு கட்டடவாக்கச் செயற்றிட்டங்கள் பேரில் கட்டடவாக்க நடவடிக்கைகள் பெருமளவு பங்களிப்புக்களை வழங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. கூட்டுறுதி தொடர்மாடிகள் மற்றும் ஏனைய வீடமைப்பு அபிவிருத்திகள் போன்ற தனியார் கட்டடவாக்கச் செயற்றிட்டங்களும் கட்டடவாக்க வளர்ச்சிக்கு தூண்டுதலை வழங்கும். கட்டடவாக்க நடவடிக்கைகளில் எதிர்பார்க்கப்படும் வளர்ச்சியிலிருந்து சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் நடவடிக்கைகள் நன்மைகளைப் பெறும். மேலும், மின்னூட்டல் மற்றும் நீர்வழங்கல் வலையமைப்பிலான தொடர்ச்சியான விரிவாக்கம் பொருளாதார அபிவிருத்திக்குப் போதுமான அடிப்படை உட்கட்டமைப்பினை வழங்க இன்றியமையாததாகும். முன்னோக்கிப் பார்க்கையில், வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கவர்ந்து கொள்வதிலும் அரச தனியார் பங்குடமையினை ஊக்குவிப்பதிலும் தொடர்ச்சியான முயற்சிகள் எடுக்கப்படல் வேண்டும் என்பதுடன் இவை தேசிய பொருளாதாரத்திற்கு கைத்தொழிலுடன் தொடர்பான பொருளாதார நடவடிக்கைகளிலிருந்து கிடைக்கும் பங்களிப்புக்களைத் தூண்டுகின்ற முக்கியமான வெற்றிகரமான காரணிகளாகவும் இருக்கின்றன.

- **பணிகள் நடவடிக்கைகள், இப்பிரிவிலுள்ள அனைத்து முக்கிய பொருளாதார நடவடிக்கைகளின் ஆதரவுடன் 2017இலும் அதன் உயர்ந்த வளர்ச்சி உத்வேகத்தினைத் தொடருமென எதிர்பார்க்கப்படுகிறது.** இலங்கையின் முக்கிய வர்த்தகப் பங்காளர்களுடன் எதிர்பார்க்கப்படும் அதிகளவு வர்த்தக உறவுகள் வெளிநாட்டு வர்த்தகத்தில் பெறுமதிகூட்டல்களுக்கு உதவியளிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. தொழில்சார் நிபுணத்துவப் பணிகள், தகவல் தொழில்நுட்ப நிகழ்ச்சிப்படுத்தல், தொலைத்தொடர்பூட்டல் மற்றும் நிதியியல் பணிகள் போன்றவற்றை உலகளாவிய சந்தைகளில் நுழைவதற்கு சுலபமாகப் பயன்படுத்தக்கூடிய உயர் பெறுமதிகூட்டப்பட்ட நடவடிக்கைகளில் பயன்படுத்திக் கொள்ளும் விதத்தில் இப்பணிகளிலுள்ள உள்ளார்ந்த வளத்தினை அபிவிருத்தி செய்ய தூண்டுதல்மிக்க கொள்கை வழிமுறைகள் தேவைப்படுகின்றன. பொருளாதாரத்தில் செழிப்படைந்துவரும் பணி நடவடிக்கைகளுக்கான தொழிலாளர் கேள்விக்கு உதவும் விதத்தில் பொருளாதாரத்தில் காணப்படும் பொருத்தப்பாடற்ற தேர்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுப்பது அவசியமாகும். இவ்வபிவிருத்திகளின் தேவையானது, மத்திய வங்கியினால் நடத்தப்பட்ட அளவீடான வியாபாரத் தோற்றப்பாட்டு அளவீடு மற்றும் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் போன்ற வியாபார உணர்திறன் அளவீட்டில் தனியார் துறை பதிலிறுப்பாளர்களினால் மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்பட்டது. தற்போதுள்ள பல்லினப் போக்குவரத்தின் வலையமைப்பினை ஒருங்கிணைப்பதும் முக்கியம் என்பதுடன் உயர் தொழில்நுட்பப் போக்குவரத்து மாதிரிகளை நாட்டிற்கு, குறிப்பாக அரச போக்குவரத்திற்கு அறிமுகப்படுத்துவதற்கு தேவைப்படுத்தப்பட்டதுடன் இது நேரத்தினையும் பொருளாதாரத்தின் மற்றைய மூலவளங்களையும் தேவையின்றி விரயம் செய்வதனைக் குறைக்கும். அதேவேளை, போருக்குப் பின்னர் சுற்றுலாக் கைத்தொழிலில் ஏற்பட்ட செழிப்பினால் தூண்டப்பட்ட விருந்தோம்பல் தொழில் துறை மேலும் வளர்ச்சியடைந்து அதன் பங்களிப்பினை மேலும் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், வியாபாரம் செய்யுங்கள் சூழலை மேம்படுத்தும் பொருட்டு ஏற்கனவே தேக்கநிலையில் இருக்கும் அமைப்பியல் சீர்திருத்தங்களை விரைவுப்பாதையில் கொண்டு செல்லும் தேவை காணப்படுகின்றது.

- **அரச மற்றும் தனியார் முதலீட்டுச் செலவினங்கள் இரண்டினாலும் பங்களிக்கப்பட்ட முதலீட்டு நடவடிக்கைகள் அதன் சாதகமான வளர்ச்சி உத்வேகத்தினை 2017 இலும் தொடருமென எதிர்பார்க்கப்பட்டதுடன் மொ.உ.உற்பத்தியின் 30.9 சதவீதத்திற்கும் வகைகூறியது.** கொழும்பு பன்னாட்டு நிதியியல் நகரம் மற்றும் விரைவுப்பாதை அபிவிருத்தி என்பனவற்றினை உள்ளடக்கிய தற்பொழுது இடம்பெற்று வருகின்ற மற்றும் திட்டமிடப்பட்டுள்ள உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் தொடர்ச்சி முன்மொழியப்பட்டுள்ள மேற்கு பிரதேச பெருநகர் செயற்றிட்டத்துடன் சேர்ந்து பொருளாதாரத்தின் முதலீடுகளை மேம்படுத்துவதற்குச் சாதகமாகப் பங்களிக்கும். மேலும், வதிவிட கூட்டு ஆதன தொடர்மாடிகள், வர்த்தகக் கட்டடங்கள், சுற்றுலாவிடுதி போன்ற கட்டடவாக்கச் செயற்றிட்டங்களுக்கான அதிகரிக்கின்ற கேள்வியை ஈர்த்துக் கொள்ளும் விதத்தில் அவற்றின் உதவியுடன் தனியார் முதலீட்டு நடவடிக்கைகள் அதன் வளர்ச்சி உத்வேகத்தினைத் தொடர்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

- **முதலீடுகள் மற்றும் பொருளாதார வளர்ச்சியை நீடித்துநிலைத்திருக்கச் செய்வதற்கு சேமிப்பினை விரும்பத்தக்க மட்டத்தில் பேணுவது இன்றியமையாததாகும்.** இது தொடர்பில் அரச சேமிப்புக்களைச் சாதகமானதொரு மட்டத்தில் அடைவதும் அதனை நிலைத்திருக்கச் செய்வதும் முக்கியமானதாகும். அரச அரசிறையை மேம்படுத்துவதற்கு முன்மதியுடைய வழிமுறைகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் இறைத் திரட்சியை மேற்கொள்ள தொடர்ச்சியான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட வேளையில் வியாபார நடவடிக்கையின் சுமுகமான பாய்ச்சலைப் பேணுவது உள்நாட்டுச் சேமிப்புக்களையும் முதலீட்டுச் சூழலையும் மேம்படுத்தப் பங்களிக்கும். நடுத்தர வருமானப் பொறியினைத் தவிர்ப்பதற்கும் உயர் வருமான மட்டங்களை நோக்கி முன்னேறுவதற்கும் உயர்மட்ட முதலீடுகள் நாட்டிற்குத் தேவைப்படுவதனால் இம்முன்னேற்றங்கள் சேமிப்பு முதலீட்டு இடைவெளியினை குறுகச் செய்து வெளிநாட்டு நிதியிடல் மூலங்களில் தங்கியிருப்பதனைக் குறைப்பதற்கு உதவும்.